Vol. 38 Issue No. 82 2026 Jan 28 - 30 Rs. 30
ஆண்டு – 38 இதழ் – 82 2026 ஜன.28–30 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்




## விஜய் தமிழகத்தின் ஒவைசியா?


## திகார் பீதி! கூட்டணிக்குள் வந்த டி.டி.வி.!



# சூடு பிடித்த தேர்தல் களம்! முந்துவது யார்?

# திகார் பீதி!

# கூட்டணிக்குள் வந்த டி.டி.வி.!



அருண்குமார்

'முதல்வர் வேட்பாளராக எடப்பாடி பழனிச்சாமி இருக்கும்வரை என்.டி.ஏ. கூட்டணியில் இணைய மாட்டேன் என கடந்த ஆண்டு இறுதிவரை உறுதியாக கூறிக் கொண்டிருந்த அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் திடீர் பல்டியடித்து அக்கூட்டணியில் இணைந்ததற்கு, அரசியலோடு சேர்த்து தனிப்பட்ட சில கணக்குகளும் உண்டு' என கூறுகிறது விவரமறிந்த வட்டாரம்.

எப்பாடு பட்டாவது தமிழ் நாட்டில் காலூன்ற நினைக்கும் பா.ஜ.க., அதன் முதல்கட்டமாக ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு ஓ.பி.எஸ்.ஸை தர்மயுத்தம் செய்ய வைத்து, தற்போது தனிமரமாக நிறுத்திவிட்டது. அதேபோல, சசிகலா, டிடிவி தினகரன் ஆகியோரையும் அ.தி.மு.க.விலிருந்து ஒதுக்கித் தள்ளி அக்கட்சியை காயலான் கடைக்கு அனுப்ப முடிவெடுத்து விட்டது.



இருந்தாலும், 2026 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. என்ற குதிரை மீது சவாரிசெய்யும் பா.ஜ.க.வின் கனவு பலிக்க வேண்டுமானால் அதிருப்தியில் இருக்கும் முக்குலத்தோர் வாக்குகளையும் என்.டி.ஏ. கூட்டணி வென்றாக வேண்டும். இதற்காக, 'சேர்க்கவே மாட்டேன்' எனக் கூறிய எடப்பாடியாரை முதலில் சமாதானம் செய்வதற்காக, கடந்த இரு மாதங்களுக்கு முன் டெல்லியி லிருந்து தமிழகம் வந்திருந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இணை பொதுச்செயலாளர் அருண்குமார், எடப்பாடியாரை ரகசியமாக சந்தித்து பேசிய பிறகு டி.டி.வி. தினகரனையும் சந்தித்தார்.

அப்போதைக்கு கூட்டணியில் சேர டி.டி.வி.தினகரன் சம்மதம் தெரிவித்திருந்தாலும், பிடிகொடுக்காமலேயே நழுவிக் கொண்டிருந்தார் எடப்பாடியார். இதனால் வெறுப்படைந்த நிலையில்தான், "எடப்பாடி பழனிச்சாமி முதல்வர் வேட் பாளராக இருக்கும்வரை என்.டி.ஏ. கூட்டணியில் சேரவே மாட்டேன்" என அழுத்தம்திருத்தமாக கூறிவந்தார் டி.டி.வி.

இதையடுத்து, தேர்தல் நெருங்கும் நேரத்தில் இவர்களின் 'பங்காளிச் சண்டையால்' கூட்டணியின் வெற்றிக்கு பாதிப்பு வந்துவிடக்கூடாது என கருதிய அமித்ஷா, அவரே நேரடியாக களத்திலிறங்கியதாகக் கூறப்படுகிறது. கள்ளக்குறிச்சியில் நடந்த தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரனின் நடைபயண நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு டெல்லி சென்ற கையோடு, 'அவங்க ரெண்டு பேரையும் உடனே டெல்லிக்கு வந்து என்னை பார்க்கச் சொல்லுங்க' என கறாராக உத்தரவு பிறப்பித்தார் அமித்ஷா.

அதைத்தொடர்ந்து, ஜனவரி 7ஆம் தேதி இரவு 9:30 மணிக்குமேல் டெல்லியிலுள்ள அமித்ஷாவின் வீட்டில் ஆஜரானார் எடப்பாடியார். அப்போது "ஓ.பி.எஸ்., சசிகலா இல்லையென்றாலும்கூட தினகரனை மட்டுமாவது கூட்டணிக்குள் கட்டாயம் இணைக்கவேண்டும். அதுதான் உங்களுக்கும் நல்லது'' என அறிவுரை கூற, அவரிடம் தலையாட்டிவிட்டு சென்னை திரும்பினார் எடப்பாடியார்.

அதேபோல, மறுநாள் இரவு அமித்ஷாவை சந்தித்தார் டி.டி.வி. தினகரன். அப்போது, வழக்கு தொடர்பான சில பேப்பர்களை காட்டிப் பேசிய அமித்ஷா, "இந்தா பாருங்க. இரட்டை இலை சின்னத்துக்கு 60 கோடி ரூபாய் லஞ்சம் கொடுக்க முயன்றதாக சி.பி.ஐ.யால் நீங்கள் கைது செய்யப்பட்ட வழக்கிலிருந்து உங்களை விடுவிக்க கோரி டெல்லி



மதுரையில் 15 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய வாலிபர் கைது

உயர்நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்த வழக்கு (CRL.REV.P. 273/2019 மற்றும் CRL.MA 5134/ 2019) கடந்த டிசம்பர் 6 ஆம் தேதி விசாரணைக்கு வந்தது. அதே வழக்கு பிப்ரவரி 2ஆம் தேதி மீண்டும் விசாரணைக்கு வருகிறது. அதாவது, ஒருபுறம் திகார் கதவும், மறுபுறம் என்.டி.ஏ. கூட்டணி கதவும் திறந்தே இருக்கின்றன. எதில் நுழையலாம் என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்'' எனக்கூற, சப்தநாடியும் ஒடுங்கிப் போய் சென்னை திரும்பிய டி.டி.வி. தினகரன் அன்றுமுதல் கப்சிப் ஆனார்.

அதன் தொடர்ச்சியாகத்தான், தமிழகம் வந்திருந்த பியூஷ் கோயல் முன்னிலையில் என்.டி.ஏ. கூட்டணியில் அவர் இணைந்ததும், மதுராந்தகத்தில் பிரதமர் மோடி முன்னிலையில், 'மாண்புமிகு. திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி' எனப் புகழ்ந்ததும் நடந்தது.

தற்போதைக்கு என்.டி.ஏ. கூட்டணியில் டி.டி.வி.தினகரன் இணைந்துவிட்டாலும், 'பழைய பாசத்தில் அவருடன் யாரும் கொஞ்சி குலாவக்கூடாது' என அ.தி.மு.க.வின் இரண்டாம்கட்டத் தலைவர்கள் அனைவருக்கும் ஸ்ட்ரிக்டான உத்தரவு பிறப்பித்திருக்கிறாராம் எடப்பாடியார்.

ஆக மொத்தத்தில்... முதலில் சசிகலா, அடுத்து ஓ.பி.எஸ்., தற்போது டி.டி.வி.தினகரன் என அ.தி.மு.க.வின் விழுதுகள் அத்தனையையும் வெட்டித்தள்ளி எம்.ஜி.ஆரால் துவங்கப்பட்டு, ஜெயலலிதாவால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு மாபெரும் இயக்கத்திற்கு பா.ஜ.க. முற்றுப்புள்ளி வைக்கப்போகும் நாளை வேதனையோடு பார்த்துக்கொண்டிருக்கின்றனர் அரசியல் நோக்கர்களும் ரத்தத்தின் ரத்தங்களும்!

**-துரை.மகேஷ்**

வரும் இதழில்...

## வசந்த் பாலகிருஷ்ணன் எழுதும்

# வார் ரூம்

-மினி தொடர்!

அரசியலில் சாணக்கியர்கள் எப்போதும் இருந்திருக்கிறார்கள். சில நேரங்களில் சந்திரகுப்தர்களே சாணக்கியர்களாகவும் இருப்பார்கள். சில நேரங்களில் சாணக்கியர்கள் சந்திரகுப்தர்களாக முயல்வார்கள். இந்திய மக்கள் இன்னும் தங்களுக்கான அரசரை, மீட்பரை, ஹீரோவை தேடுகிறார்கள் என்பதே பிரசாந்த் கிஷோரின் முதல் நம்பிக்கையாகவும் வியூகமாகவும் இருந்தது. அப்படித்தான் மோடியை ஒரு தலைவனாக, மீட்பராக, மாற்றத்துக்கான தூதுவராக பெரும் பிம்பத்தை கட்டமைக்கத் தொடங்கினார். அந்தப் பணி தலைவர்களின் தோற்றத்தில் இருந்தே தொடங்கும். தோற்றமே மக்களுக்கு 'இவரால் முடியும்' என்ற நம்பிக்கையையும் உறுதியையும் தரவேண்டும் என்பவர் பிரசாந்த் கிஷோர். மோடியின் உடையில் தொடங்கி நமது முதல்வர் ஸ்டாலினின் சிகை வரை பல தோற்ற மாற்றங்கள் நடந்தன! அரசியல்வாதிகள், எல்லோரையும் ஏமாற்றக்கூடியவர்கள் என்று சாதாரண மக்கள் நினைப்பார்கள், அந்த அரசியல்வாதிகளையே ஏமாற்ற, இல்லை, இல்லை மாற்றக் கூடியவர்கள் இந்த தேர்தல் தந்திரர்கள்.




காஞ்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை



# டப்பா என்ஜின் ஆட்ச

## –மோடிக்கு முதல்வர் பதிலடி!

**பா**.ஜ.க. மேலிடம் கொடுத்த தமிழக தேர்தல் கூட்டணி அசைன்மெண்ட்டை பியூஷ் கோயல் குழு கச்சித மாக முடித்த நிலையில், கூட்டணியில் யார், யார் உள்ளார்கள் என்பதை அறிவிக்க, தே.ஜ.கூட்டணி யின் பிரமாண்ட பிரச்சாரக் கூட்டத்தை செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் கடந்த 23ஆம் தேதி வெள்ளிக்கிழமை நடத்தி முடித்திருக்கிறார்கள்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் ராணுவ நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு விமானப்படை விமானம் மூலம் சென்னைக்கு வந்த பிரதமர் மோடி, ஹெலிகாப்டர் மூலம் மாலை 3:25 மணிக்கு மதுராந்தகத்தில் வந்திறங்கினார். தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட பா.ஜ.க. நிர்வாகிகள், எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினர் மோடியை வரவேற்றனர். பிரதமர் மோடிக்கு சால்வை அணிவித்து, ஏலக்காய் மாலை போட்டு திருப்பரங்குன்றம் முருகர் படத்தை பரிசளித்தார் எடப்பாடி பழனிசாமி.

பிரம்மாண்ட கூட்டத்தில் பேசிய மோடி, “தமிழ்நாடு ஆட்சி மாற்றத்திற்கு தயாராகி விட்டது. தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக்கூட்டணி ஆட்சி அமைக்கும். தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர்கள், தி.மு.க.விடமிருந்து மக்களை விடுவிக்க வேண்டுமென்ற உறுதிப்பாட்டுடன் ஒன்றாக இணைந்துள்ளனர். தமிழகத்தின் வளர்ச்சியை உயர்த்த வேண்டும். பாதுகாப்பான, ஊழலற்ற மாநிலமாக மாற்ற வேண்டும். தி.மு.க.வை முடிவுகட்ட கவுண்டவுன் துவங்கிவிட்டது. தமிழகத்தில் பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயகக் கூட் டணியின் இரட்டை இன்ஜின் அரசு அமைவது உறுதியாகிவிட்டது'' என்றார். இதன்மூலம் கூட்டணி ஆட்சியை அமைப்போமென சூசகமாகக் குறிப்பிட்டார். மேலும், “பெண்களுக்கு பாதுகாப் பில்லாத நிலை நிலவுகிறது. குடும்ப அரசியல் செய்கிறார்கள். இந்துக்களுக்கு எதிரான அரசான தி.மு.க.வை அகற்ற வேண்டும். கடந்த 11 வருடங்களாக நடைபெறும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில், தமிழகத்திற்கு மூன்று லட்சம் கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. தி.மு.க. -காங் கிரஸ் கட்சிகளின் மத்திய கூட்டணி ஆட்சியில் வழங்கியதைவிட இது மூன்று மடங்கு அதிகம். திருப்பரங்குன்றம் விவகாரத்திலும், ஜல்லிக்கட்டி லும் தமிழர்களுக்கு எதிராக செயல்பட்டது தி.மு.க. கூட்டணி. தமிழ், தமிழர்கள், தமிழ் கலாச்சாரத்திற்கு எதிரி தி.மு.க.” என்றெல்லாம் விமர்சித்து பேசி விட்டு, பின்னர் கூட்டணிக்கட்சித் தலைவர்களு டன் கையை உயர்த்தி போஸ் கொடுத்துமுடித்த பின் டெல்லி திரும்பினார்.

இந்த கூட்டத்தில் பேசிய டி.டி.வி.தினகரன், “தி.மு.க. அரசுக்கு முடிவுகட்ட வேண்டுமென்று






தி!

மோடி விரும்பினார். இதற்காக அண்ணன் எடப்பாடியார் தலைமையை ஏற்றுக்கொண்டோம்'' என்று, தான் எடுத்த முடிவுக்கு விளக்கமளித்தார். அதே நேரத்தில், டி.டி.வி.தினகரனின் தீவிர விசுவாசியான அ.ம.மு.க. துணைப்பொதுச் செயலாளர் கடம்பூர் மாணிக்கராஜா, கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளர் ஏ ஸ்டெல்லஸ், கன்னியாகுமரி மத்திய மாவட்ட செயலாளர் ரத்தினராஜ், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராமச்சந்திர மூர்த்தி என்கின்ற வினோத் ஆகியோர் அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தனர்.

அன்புமணி ராமதாஸ் பேசியபோது, "தி.மு.க.வுக்கு முடிவுகட்ட இன்று தொடக்க நாள்'' என்று கூறியவர், குடும்ப அரசியல், கஞ்சாசாராயம், போதையில் முதலிடம் என்றும், கொடுத்த 505 வாக்குகளில் 66 வாக்குகளை மட்டுமே தி.மு.க. நிறைவேற்றியுள்ளது என்றும் தி.மு.க.வை விமர்சனம் செய்தார். குடும்ப அரசியலென்று குற்றம்சாட்டிப் பேசிய அன்புமணி, அந்த கூட்டத்தில் மாம்பழ சின்னத்தை பயன்படுத்தியது சட்டவிரோதமென்று அவரது தந்தை பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கண்டித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியோ, "பிரதமர் மோடி இந்த மண்ணில் காலை வைத்ததும் இயற்கையே சூரியனை மறைத்துவிட்டது. எங்கே பார்த்தாலும் மக்கள் வெள்ளம். மக்கள் கூட்டத்தால் கடல் போல காட்சியளிக்கிறது. இந்த மதுராந்தகம் பூமியே குலுங்குகின்ற அளவிற்கு மக்கள் வெள்ளம் திரண்டுள்ளது. இதுவே நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் வெற்றிக்கு சான்று. தி.மு.க.வுக்கு இது இறுதித் தேர்தல்'' எனக்கூறி தி.மு.க.வை அடுக்கடுக்காக விமர்சனம் செய்தார்.


தி.மு.க. மீதான விமர்சனங்களுக்கு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி கொடுத்தார். மு.க.ஸ்டாலின் பேசியபோது, "தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகமாகிவிட்டதாகப் பிரதமர் பேசியுள்ளார். நாடு முழுக்க கடந்த 5 ஆண்டுகளில் துறைமுகங்கள் வழியாக ரூ.11,311 கோடி அளவிலான போதைப் பொருட்கள் பிடிபட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. அதில் பெரும்பாலும் குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில்தான் பிடிபட்டுள் ளது. அங்கெல்லாம் உங்களுடைய டபுள் இஞ்சின் எனும் டப்பா இஞ்சின் ஆட்சி தானே ஓடுது!

தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று பிரதமர் கூறியுள்ளார். ஐந்து மாத கர்ப்பிணி பில்கிஸ் பானுவைப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கியவர்களை விடுதலை செய்தது குஜராத் அரசு. இவர்கள் பெண்கள் பாதுகாப்பைப் பற்றிப் பேசலாமா? மதுராந்தகத்தில் மோடி மண்ணில் காலை வைத்ததும் உதயசூரியன் மறைந்து, மழை வந்துவிட்டதென்று எடப்பாடி கூறினார். வாழ்க்கை முழுவதும் காலையே பார்த்துக்கொண்டிருந்தால் சூரியன் எப்படி தெரியும்? நிமிர்ந்து நின்று பார்த்தால்தான் சூரியன் தெரியும்!" என்று அதிரடி காட்டினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

-அரவிந்த்

படங்கள் : ஸ்டாலின்





தே.ஜ. கூட்டணி கூட்டத்தில்...

## சூடு பிடித்த தேர்தல் களம்!

# முந்துவது யா

தமிழக சட்டமன்றத் தேர்தல் களம் அனல் பறக்கத் தொடங்கியிருக்கிறது. ஒரு பக்கம் தி.மு.க. தனது வலுவான கூட்டணியுடன் இறுதிக்கட்ட தேர்தல் பணிகளில் ஈடுபட்டுவருகிறது. இன்னொரு பக்கம் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் தங்களது கூட்டணிக்குள் பிற கட்சிகளை இணைக்க கடுமையாக முயற்சித்து வருகின்றன. இதனால், தேர்தல் களத்தில் முந்துவது யார்? என்கிற பட்டிமன்றம் தமிழக அரசியலில் அதிகரித்திருக்கிறது.

சமீபத்தில் அறிவாலயத்தில் நடந்த தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தி.மு.க.வின் தேர்தல் பணியை முடுக்கிவிடும் வகையில் நான்கு முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

தி.மு.க. ஆட்சியில் இதுவரை பெண்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்திய திட்டங்களையும், அதனால் நிகழ்ந்த சாதனைகளையும் எடுத்துக்கூறி பெண்களின் முழுமையான ஆதரவைப் பெறும் வகையில் மகளிரணியினர் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்யவும் தமிழ்நாடு முழுவதும் தெருமுனைப் பரப்புரைக் கூட்டங்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தின் நான்கு மண்டலங்களில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி!’ என்ற பெயரில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் ஆகியோருக்கான பயிற்சி மாநாடுகள் நடத்தப்படவுள்ளன. இதில் சுமார் 8 லட்சம் பேருக்கு பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

மார்ச் 8ஆம் தேதி திருச்சியில் 10 லட்சம் தொண்டர்களைத் திரட்டி ‘ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்!’ என்கிற தலைப்பில் மாபெரும் மாநில மாநாட்டை நடத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சிகள் தங்களின் கூட்டணியையே இன்னும் இறுதிசெய்ய முடியாமல் குழம்பிக் கொண்டிருக்கும் சூழலில், தேர்தல் பணிகளின் இறுதிக்கட்டத்தையே எட்டிவிட்டது தி.மு.க. கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை, தேர்தல் அறிக்கை தயாரிப்பு, பிரச்சார சந்திப்பு, மாநில மாநாடு என மிக வேகமாகவும், பல நுணுக்கங்களுடனும் தேர்தல் பணிகளை முன்னெடுத்து வருகிறார் ஸ்டாலின்.

தி.மு.க.வின் கூட்டணியைப் பொருத்தவரை 2019 நாடாளுமன்றத் தேர்தலிலிருந்து எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்துவருகிறது. காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள், விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.க., முஸ்லிம் லீக் உள்ளிட்ட பிரதான கட்சிகளுடன் சேர்த்து 21 கட்சிகளை உள்ளடக்கிய வலுவான கூட்டணியாக தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இருக்கிறது.

இந்தக் கூட்டணியில் புதிதாக சில கட்சிகளும் கூட்டணியில் இணைவதற்கான சூழலும் நிலவுகிறது. 2019, 2021, 2024 ஆகிய பொதுத்தேர்தல்களிலும், உள்ளாட்சி மற்றும் இடைத் தேர்தல்களிலும் தோல்வியையே சந்திக்காமல் தொடர் வெற்றிகளை இந்தக் கூட்டணி பெற்று வருகின்றது.

அ.தி.மு.க.வோ கடந்த சட்டமன்றத் தேர்தலில் அமைத்த கூட்டணியையே மீண்டும் அமைக்க முயற்சித்துவருகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணியை முறித்துவிட்டு தி.மு.க. கூட்டணியில் இருக்கும் கட்சிகளுக்கு வலைவீசிப் பார்த்தார் எடப்பாடி பழனிசாமி. அந்த முயற்சியும், தேர்தல் முடிவுகளும் எடப்பாடி பழனிச்சாமிக்கு படுதோல்வியையே கொடுத்தன. வேறு வழியின்றி கடந்த ஆண்டு

www.nakkheeran.in




மீண்டும் பா.ஜ.க.வுடன் கரம்கோத்து, தேசிய ஜனநாயக கூட்டணியில் ஐக்கியமாகியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அ.தி.மு.க.தான் தலைமை தாங்குவதாக தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி கூறிவந்தாலும், கூட்டணி முடிவுகளை பா.ஜ.க.வே எடுத்து வருகிறது. ஒருபுறம் கூட்டணி ஆட்சி என்று மோடி, அமித்ஷா போன்ற பா.ஜ.க. தலைவர்கள் தொடர்ந்து பேசிவர... எடப்பாடி பழனிசாமியோ, அ.தி.மு.க. தனித்து ஆட்சி அமைக்கும் என்று பேசி வருகிறார். ஆனால், இதற்கு பெரிய தாக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் தேர்தல் தேதி நெருங்கியுள்ள நிலையில், எடப்பாடி பழனிசாமி கூட்டணிக்குள் புதிய கட்சிகளை இணைக்கத் தடுமாறி வந்தார். அதனால் பா.ஜ.க.வே நேரடியாகவே களத்தில் இறங்கி கூட்டணியமைக்கும் வேலையில் இறங்கியுள்ளது. கடந்த தேர்தல்களில் தங்கள் கூட்டணியில் இடம்பெற்ற கட்சிகளை இணைக்கும்விதமாக மத்திய அமைச்சர் பியூஷ் கோயலை களமிறக்கி செயலாற்றிவருகிறது பா.ஜ.க.

கடந்த காலங்களில் தங்களது கூட்டணியிலிருந்த கட்சிகளை மீண்டும் இணைப்பதும், விஜய்யின் த.வெ.க. பக்கம் அவர்கள் சாய்ந்துவிடாமல் தடுப்பதும்தான் டெல்லியின் டாப் அசைன்மெண்ட். அதற்காக அனைத்து அஸ்திரங்களையும் பா.ஜ.க. பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறது.

இதன் தொடக்கமாக அன்புமணியின் தலைமையிலான பா.ம.க.வை, அ.தி.மு.க. கூட்டணிக்குள் இழுத்து வந்தது, ராமதாஸுக்கும் அன்புமணிக்கும் இடையே நடக்கும் மோதலால் பா.ம.க.வின் வாக்கு வங்கியும் பிளவுபட்டே கிடக்கிறது. அன்புமணி தலைமையிலான பா.ம.க. தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்தாலும், கடந்த காலங்களில் பெற்ற வாக்குகள் மீண்டும் பா.ம.க.விற்கோ, அக்கட்சி சார்ந்துள்ள கூட்டணிக்கோ கிடைக்குமா? என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அண்மையில் டி.டி.வி. தினகரன் இணைந்திருப்பது அரசியல் களத்தில் கூடுதல் பரபரப்பைக் கிளப்பியிருக்கிறது. கடந்த சில மாதங்களாக எடப்பாடியை முதலமைச்சர் வேட்பாளராக ஏற்கமுடியாது என்றும், விஜய்க்கு ஆதரவான குரலிலும் பேசிவந்த டி.டி.வி. தினகரனை திடீரென கூட்டணியில் இணைத்திருக்கிறது பா.ஜ.க. இந்த இணைப்பு நிகழ்ச்சியில் கூட்டணிக்குத் தலைமை தாங்கும் எடப்பாடி பழனிச்சாமி கலந்து கொள்ளவில்லை. தினகரனும்,

www.nakkheeran.in

அசாமில் இருந்து வங்கதேசத்தினர்
15 பேர் வெளியேற்றம்

**தங்கம் திருட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட சபரிமலை தந்திரி தனியார் நிதிநிறுவனத்தில் ரூ.2.5 கோடி முதலீடு: சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை**



### இறுதிச்சுற்று!

## தி.மு.க.வில் இணைந்த வைத்திலிங்கம்!

குடியரசுத் தினத்தையொட்டி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கொடியேற்றி தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தினார் தமிழக முதல்வர் ஸ்டாலின். பின்பு, ஆளுநரின் தேநீர் விருந்தைப் புறக்கணித்துவிட்டு, உடனடியாக தனி விமானம் பிடித்து திருச்சிக்கு வந்தார். ஜனவரி 26 அன்று மாலை மகளிர் மாநாடு நடைபெறும் செங்கிப்பட்டிக்கு வந்த அவர், மகளிர் விழா நடைபெறும் மேடைக்கு அருகிலேயே ஏற்பாடு செய்யப்பட்ட தனி மேடையில் அ.தி.மு.க.வின் வைத்திலிங்கம் தலைமையில் பத்தாயிரம் பேர் தி.மு.க.வில் இணையும் விழாவில் கலந்துகொண்டார். சுயமரியாதை முக்கியமென கருதி தி.மு.க.வுக்கு வைத்திலிங்கம் வந்திருப்பதாக தனது உரையில் முதல்வர் குறிப்பிட்டார்.

எடப்பாடி பழனிச்சாமியின் தலைமை குறித்து எதுவும் பேசவில்லை, தமிழ்நாட்டில் தேசிய ஜன நாயகக் கூட்டணிக்கு தலைமை தாங்குவதாகக் கூறும் எடப்பாடி பழனிச்சாமியின் முன்னிலையில் கூட்டணியில் இணையாமல், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் முன்னிலையில் டி.டி.வி. தினகரன் இணைந்திருப்பதன் மூலமே அந்தக் கூட்டணியின் விரிசல் வெளிப்படையாகத் தெரிகிறது. எங்களுக்குள் இருப்பது பங்காளிச் சண்டைதான் என்று தினகரன் கூறினாலும், தேர்தல் களத்தில் இரு கட்சிகளின் தொண்டர்களும் இணைந்து இணக்கமாக பணியாற்றுவார்களா? என்கிற கேள்வி வலிமையாக முன்வைக்கப்படுகிறது.

எடப்பாடி பழனிசாமி தலைமையிலான கூட்டணியில் இணைவதில் ஆர்வம் காட்டாத டி.டி.வி. தினகரன் திடீரென, தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்தற்கான காரணம் அவர் மீது நிலுவையிலிருக்கும் வழக்குகளை சுட்டிக்காட்டி பா.ஜ.க. கொடுத்த நிர்பந்தம்தான் என அ.ம.மு.க. வட்டாரத்தில் பேசப்பட்டுவருகிறது.

கடந்த தேர்தல்களில் அ.ம.மு.க. பிரித்த வாக்குகளை, டி.டி.வி. தினகரனை கூட்டணியில் இணைத்ததன் மூலம் ஈர்த்துவிடலாம் என பா.ஜ.க.வின் தலைமையும் அறிவுஜீவிகள் குழுவும் கணக்குப் போட்டிருக்கின்றன. ஆனால் அ.ம.மு.க.வின் வாக்கு வங்கி தொடர்ந்து சரிந்தே வந்திருக்கிறது.

குறிப்பாக, அ.ம.மு.க. 2019 நாடாளு மன்றத் தேர்தலின்போது 5.27% பெற்றது. இந்த சதவீதம் அடுத்து வந்த 2021-சட்ட மன்றத் தேர்தலில் 2.35 சதவீதமாகவும், 2024-ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 0.90 சதவீதமாகவும் தேய்ந்து சுருங்கி விட்டது, இந்த வாக்குகளும் கூட சமுதாய ரீதியில் எடப்பாடி பழனிச்சாமியின் தலைமைக்கு எதிராக விழுந்த வாக்குகள். ஆக, எடப்பாடியுடன் ஓரணியில் கூட்டணி வைப்பதன் மூலம், இந்த வாக்குகள் மேலும் குறைவதற்கே அதிக வாய்ப்புகள் உள்ளன. பொதுவாக, தேர்தல் காலங்களில் ஆளும் கட்சியின் மீது வெளிப்படும் எதிர்ப்பலையே எதிர்க் கட்சிகளின் வெற்றியைத் தீர்மானிக்கும். ஆனால் தி.மு.க. ஆட்சியின் மீது அத்தகைய எதிர்ப்பலை இல்லை. ஊடக கருத்துக் கணிப்புகளும் மத்திய -மாநில அரசுகளின் உளவுத்துறையினரின் கருத்துக்கணிப்புகளும் அதையே கூறுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தச் சூழ்நிலையில் தீவிரமாக தேர்தல் பணிகளை முடுக்கிவிட்டுள்ள தி.மு.க.வை ஒப்பிடு கையில் அ.தி.மு.க. இன்னும் குழப்பத்திலேயே தத்தளித்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு, தனது அறிக்கையை சமர்ப்பிக்காத சூழலில், தேர்தல் வாக்குறுதிகளாக 5 விசயங்களை எடப்பாடி பழனிச்சாமி அறிவித்திருப்பதை அ.தி.மு.க.வின் மூத்த தலைவர்களே ரசிக்கவில்லை.

கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, தேர்தல் ரேஸில் அ.தி.மு.க. முதலடியை எடுத்து வைப்ப தற்கு முன்பே தி.மு.க.வின் அதிரடிப் பாய்ச்சல், வெற்றிக் கோட்டையை நோக்கி இருக்கிறது என்பதே தமிழக தேர்தல் களத்தின் நிதர்சனம்!

**-இரா.இளையசெல்வன்**

# தலைமுறைகள் தாண்டி தலைசிறந்த சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.

: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300

7 தலைமுறைகள், 213 வருடங்களாக தொடர்ந்து சித்த வைத்தியம் செய்து வரும் ஒரே ஸ்தாபனம். பாரம்பரியமும், கைராசியும் கொண்ட எங்கள் சித்த வைத்திய சாலையில் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு ஆரம்ப நிலை மற்றும் நாட்பட்ட நோய்கள், ஆண்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை



Dr.சிவராஜ் சிவகுமார்

## சென்னை கிளை
10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில், VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

## ஈரோடு கிளை
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில், கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர், வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

## ஓசூர் கிளை
M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம் அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஓசூர்.
M : 81108 03500

## திருப்பத்தூர் கிளை
88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500



Dr.சிவராஜ் சிபி

## ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)

**திருச்சி** — 1ம், 9ம் தேதியும் காலை 6 முதல் மாலை 5 வரை ஹோட்டல் அபிராமி சென்ட்ரல் பஸ்நிலையம், பெரியார் சிலை அருகில்.

**திருப்பூர்** — 1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை 14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை SAP ரெஸிடென்ஸி 111, முனிசிபல் ஆபீஸ் ரோடு.

**தஞ்சை** — 2ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை ஹோட்டல் காசி இன் 1493, தெற்கலங்கம், பழைய பேருந்து நிலையம்.

**கும்பகோணம்** — 2ம் தேதி மதியம் 2 முதல் மாலை 5 வரை ஹோட்டல் திருமால் ஜான்செல்வராஜ் நகர், புதிய பஸ்நிலையம் அருகில்.

**நாகர்கோவில்** — 2ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை, ஹோட்டல் கங்கா பேலஸ் K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன்.

**நெல்லை** — 3ம், 23ம் தேதியும், காலை 6 முதல் மாலை 5 வரை, பரணி லாட்ஜ் பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**விழுப்புரம்** — 3ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை ஹோட்டல் ஆதித்யா தேர் விநாயகர் கோவில் & புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர்.

**காஞ்சிபுரம்** — 4ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை வசந்த் வில்லா T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை & பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில்.

**மதுரை** — 4ம், 22ம் தேதியும் காலை 6 முதல் மாலை 5 வரை காலேஜ் ஹவுஸ் டவுன் ஹால் ரோடு.

**கள்ளக்குறிச்சி** — 4ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை AKT லாட்ஜ் பஸ் நிலையம் அருகில்.

**தேனி** — 7ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை ஹோட்டல் தேனி இன்டர்நேசனல் பழைய பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**திண்டுக்கல்** — 8ம், 24ம் தேதியும் காலை 6 முதல் மாலை 5 வரை ஹோட்டல் ஐஸ்வர்யா ஸ்பென்ஸர் காம்பௌண்ட், பஸ் நிலையம் எதிரில்.

**திருவண்ணாமலை** — 9ம், 22ம் தேதியும் காலை 6 முதல் மாலை 5 வரை ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி.

**வேலூர்** — 11ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ் 3, தென்னைமரம் தெரு.

**கடலூர்** — 11ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை ஹோட்டல் CAR லாட்ஜ் 62, லாரன்ஸ் ரோடு.

**சிதம்பரம்** — 11ம் தேதி மதியம் 2 முதல் மாலை 5 வரை ஹோட்டல் ஜெயராம் 35, 36, SP கோயில் தெரு.

**மாயவரம்** — 12ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை அல்-முஜம்மில் லாட்ஜ் பழைய பஸ்நிலையம் அருகில்.

**நாகப்பட்டினம்** — 12ம் தேதி மதியம் 2 முதல் மாலை 5 வரை நியூ குமார் லாட்ஜ் புதிய பஸ் நிலையம் அருகில்.

**மன்னார்குடி** — 13ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை ஹோட்டல் காவேரி லாட்ஜ் புதிய பஸ் நிலையம் அருகில்.

**புதுக்கோட்டை** — 13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை 26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை ஹோட்டல் ராயல் பார்க் புதிய பஸ்நிலையம் எதிரில்.

**கோவை** — 13ம், 26ம் தேதியும் காலை 6 முதல் மாலை 5 வரை OYO ROOMS (கோடா ஓட்டல்) 294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில்.

**கரூர்** — 14ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை ஆர்த்தி ஹோட்டல் தின்னப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில்.

**புதுவை** — 16ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி பஸ் நிலையம் எதிரில்.

**தென்காசி** — 18ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம் 2, பழைய பஸ் நிலையம் ரோடு.

**ராஜபாளையம்** — 19ஆம் தேதி, காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை ஹோட்டல் ஆனந்தாஸ் 295A, பழைய பேருந்து நிலையம் அருகில், தென்காசி சாலை, ராஜபாளையம்.

**கிருஷ்ணகிரி** — 20ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ் 239, பெங்களூர் ரோடு.

**ஆரணி** — 21ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ் பஸ் நிலையம் அருகில்.


**ராம்நாடு** — 24ம் தேதி காலை 6 முதல் மாலை 5வரை ஹராஜா பேலஸ் துரைராஜ் சத்திரம் வீதி.

**சிவகாசி** — 25ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை மணீஸ் லாட்ஜ் பஸ் நிலையம் பின்புறம்.

**பொள்ளாச்சி** — 27ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை சக்தி ஹோட்டல் 144, கோவை ரோடு.

**மேட்டுப்பாளையம்** — 28ம் தேதி காலை 6 முதல் மாலை 5 வரை ஹோட்டல் காவேரி K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு.

சிவராஜ் சித்த மருந்துகளை ஆன்லைன் மூலம் பெற www.sivarajsiddha.com | G Pay Paytm 98427 22500






7 தலைமுறைகள், 213 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட நிறுவனம்.

for more details

Advt

ரங்கசாமியை சந்தித்த
சார்லஸ் மார்டின்



# ரங்கசாமியிடம் சரண்டரான பா.ஜ.க.!

## -புதுவை அரசியல் பரபரப்பு!

புதுவையில் என்.ஆர்.காங்கிரஸும், பா.ஜ.க.வும் கூட்டணி ஆட்சி நடத்திக்கொண்டிருந்தாலும், தொடக்கம் முதலே முதலமைச்சர் ரங்கசாமிக்கும் -பா.ஜ.க.வினருக்கும் இடையே ஒத்துப்போகாததால் கடந்த நான்கரை ஆண்டு காலமாகவே டாம்&ஜெர்ரி ஆட்டம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

புதுவை யூனியன் பிரதேசத்தில் 2026 தேர்தலில் தனித்து ஆட்சியைப் பிடித்து பா.ஜ.க.வைச் சேர்ந்தவர் முதலமைச்சர் நாற்காலியில் அமரவேண்டும் என முடிவு செய்தது பா.ஜ.க. தலைமை. இதற்காக அமைச்சரவையில் இருந்துகொண்டே என்.ஆர். காங்கிரஸுக்கு எதிரான வேலைகளை செய்யத் துவங்கியது. சபாநாயகர் செல்வம், பா.ஜ.க. எம்.எல்.ஏ ஜான்குமார் மூலமாக என்.ஆர்.காங்கிரஸை விமர்சிக்கச் செய்தனர். நாடாளுமன்றத் தேர்தலில் புதுவையில் உள்துறை அமைச்சராக உள்ள பா.ஜ.க. நமச்சிவாயம் போட்டியிட்டு தோல்வியடைந்த பின், களநிலவரம் அறிந்து தனித்து பா.ஜ.க. ஆட்சிக் கனவிலிருந்து வெளியேவந்து யோசித்து ஆட்டத்தை மாற்றி ஆடத்துவங்கினர்.

என்.ஆர்.காங்கிரஸுடன் இணைந்து 2026 சட்டமன்றத் தேர்தலை சந்திப்போம், தேர்தல் முடிவுக்கு பின்னர் முதலமைச்சர் நாற்காலியில் பா.ஜ.க. அமரவேண்டும் என முடிவு செய்து, ஊழல் முதலமைச்சர், மதுபான தொழிற்சாலை அனுமதிக்கு லஞ்சம், கோவில் சொத்து கொள்ளை என என்.ஆர்.காங்கிரஸ் மீது தாக்குதல் நடத்தி, மிரட்டத் துவங்கியது பா.ஜ.க. அதோடு, ஐ.எப்.எஸ். அதிகாரி சத்தியமூர்த்தி, தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு பா.ஜ.க.வுக்காக வேலை செய்யத் துவங்கினார். அவரை புதுவை பா.ஜ.க. தலைவராக்க ஒரு பெரிய டீமே வேலை செய்தது. அமைச்சர் பதவிக்கு இலவு காத்த கிளியாக இருந்த பா.ஜ.க. எம்.எல்.ஏ. ஜான்குமார் மூலமாக, லாட்டரி மார்டின் மகன் சார்லஸை புதுவையில் களமிறக்கியது. 'ஜே.சி.எம். மக்கள் மன்றம்' என்கிற பெயரில் புதுவையில் களமிறங்கி நலத்திட்டங்கள் வழங்குகிறேன் எனச்சொல்லி பணத்தை வாரியிறைத்து, ஆளும்கட்சியான

**பிறர் வெற்றியடைந்தால் நாம் தோல்வியடைந்ததாக அர்த்தம் அல்ல, நம்முடைய தருணமும் வரும், பொறுமையாக இரு!**

என்.ஆர்.காங்கிரஸை கடுமையாக விமர்சித்தவர், மறந்தும் அமைச்சரவையில் உள்ள பா.ஜ.கவை விமர்சிக்கவில்லை. அவரே, “ஒருமாதத்துக்கு முன்பு லட்சிய ஜனநாயக கட்சியைத் தொடங்கியுள்ளேன், 30 தொகுதியிலும் போட்டியிடப்போகிறோம்” என அறிவித்துவிட்டு, சிட்டிங் சுயேட்சை எம்.எல்.ஏ.க்கள், முக்கிய பிரமுகர்களுக்கு பணம் தந்து வளைத்து, ‘உங்களுக்கு நான் சீட் தருகிறேன், பணமும் தருகிறேன்’ எனச்சொல்லி தன்னருகில் வைத்துக் கொண்டார்.

இந்நிலையில் முதலமைச்சர் ரங்கசாமியை பதவியிலிருந்து இறக்குவேன் என பந்தாவாக பேசிவந்த லாட்டரி சார்லஸ் மார்டின், கடந்த பொங்கலின் போது ரங்கசாமியை அவரது அலுவலகத்தில் சந்தித்து அவரது காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கியது, இவரை நம்பி வந்த சுயேட்சை எம்.எல்.ஏ.க்கள், அரசியல் பிரமுகர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

ஏன்? எதனால் இந்த திடீர் சரண்டர் என விசாரித்தபோது, முதலமைச்சர் நாற்காலியில் ரங்கசாமி அமர்ந்திருந்தாலும் கவர்னர் ஆட்சி செய்வது, தன் கைகள் கட்டிப் போடப்பட்டிருப்பதும் அவருக்கு சுத்தமாக பிடிக்கவில்லை. இதனால் ரங்கசாமியும் -பா.ஜ.க.வும் கடுமையாக உள்ளுக்குள் மோதிக்கொண்டன. கூட்டணி ஆட்சியை நடத்திக்கொண்டே மறைமுகமாக ஊழல்வாதி என தன்பெயரை டேமேஜ் செய்வது அவருக்கு கோபத்தை உருவாக்கியது. அதேபோல் கவர்னர் கைலாசநாதன், தன் பங்குக்கு முன்னாள் ஐ.எப்.எஸ். அதிகாரி சத்தியமூர்த்திக்கு ஆதரவாக இருந்தார். டெல்லி பா.ஜ.க., சார்லஸுக்கு ஆதரவாக இருந்தது. இவர்களின் செயலால் தேர்தல் நெருக்கத்தில் கூட்டணியை உடைத்துவிட்டு தி.மு.க.வோடு கூட்டணி அமைக்கலாம் அல்லது நடிகர் விஜய் கட்சியோடு கூட்டணி அமைக்கலாம் என திட்டமிட்டு மறைமுகமாக பேச்சுவார்த்தை நடத்தினார் ரங்கசாமி. இதனை பா.ஜ.க. உணர்ந்த பின்பே ரங்கசாமியிடம் சரண்டராக முடிவெடுத்து, அவரிடம் பேசியபோது... அவர் பிடி கொடுக்கவில்லை. ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், துணை குடியரசுத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், ஒன்றிய இணையமைச்சர் முருகன் உட்பட பல பா.ஜ.க. தலைகள் ரங்கசாமியிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அவரை சமாதானப்படுத்த முயன்றனர்.

அவரோ, அமைச்சர் ஜான்குமார், சார்லஸ் மார்டின், சத்தியமூர்த்தி போன்றவர்களை அடக்கி வைக்கச் சொன்னார். அதற்கு தொடக்கத்தில் பா.ஜ.க. தலைமை தயக்கம் காட்டியது. ‘நான் சொல்றதை செய்தால்தான் கூட்டணி தொடரும்’ என்றார். இதனால் வேறு வழியில்லாமல் பா.ஜ.க. ஒப்புக்கொண்டது. ஜான்குமார் அமைச்சராகி 185 நாட்களைக் கடந்தும் இலாகா இல்லாத அமைச்சராகவே வலம்வரச் செய்துள்ளார் ரங்கசாமி. சதி என ஜான்குமார் புலம்பியும் பா.ஜ.க. அதனை வலியுறுத்தவில்லை.

அதேபோல் பா.ஜ.க.வின் செல்லப்பிள்ளையும், கவர்னர் கைலாசநாதன் ஆதரித்தவருமான சத்தியமூர்த்தி, இரண்டாயிரம் கோடி ரூபாய் போலிமருந்து விற்பனை விவகாரத்தில் போலிமருந்து கும்பலிடம் 100 கோடி ரூபாய் பணம் வாங்கியதாக முதலமைச்சர் ரங்கசாமி பா.ஜ.க.விடம் சொன்னதும், அவரது மனதை குளிர்விக்க வேண்டும் என சத்தியமூர்த்தியை கைது செய்ய பச்சைக்கொடி காட்ட... கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டார் சத்தியமூர்த்தி. அதன்பின் சார்லஸ் மார்டினிடம் முதலமைச்சர் ரங்கசாமியை நேரில் போய் சந்திக்கவேண்டும் என பா.ஜ.க. தலைமை சொல்ல, அதைக்கேட்டு சார்லஸ் அதிர்ச்சியாகிவிட்டார். அவருக்கு வேறு வழியில்லை, அதனால் அவரும் முதலமைச்சர் அலுவலகத்துக்கு சென்று முதலமைச்சர் ரங்கசாமியை சந்தித்து அவரது காலில் விழுந்து ஆசிபெற்றார். முன்பு என்.ஆர்.சி.யை எதிர்த்த அளவுக்கு இப்போது அவரிடம் எதிர்ப்பில்லை.

ஆக... ரங்கசாமியை பா.ஜ.க. அடக்கி டம்மியாக்க நினைத்தது. ஆனால் அவரிடம் அடங்கிப்போய்விட்டது பா.ஜ.க. என்கிறார்கள் அரசியல் பார்வையாளர்கள்.

எதிர்கூடாரத்தில் தி.மு.க.வும், காங்கிரஸும் 30 தொகுதிகளில் தங்களுக்கு 20 இடங்கள் வேண்டும் என்று அடித்துக் கொண்டிருக்கின்றன. ஆளும் கட்சியை எதிர்த்து தொகுதி வாரியாக காங்கிரஸ் நடைபயணம் நடத்திக்கொண்டிருக்கிறது.

**-து.ராஜா**



சத்தியமூர்த்தி

# மாவலி பதில்கள்

**எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு**

**அ.தி.மு.க.வின் வாக்குகள் விஜய்க்கு விழாது என கவுதமி கூறியிருக்கிறாரே?**

சரியாகத்தான் சொல்லியிருக்கார். அ.தி.மு.க. துணை பிரச்சாரச் செயலாளராக இருந்துகொண்டு, கௌதமி வேறென்ன பதில் சொல்வார் என எதிர்பார்க்கிறீர்கள்?

**ப.நூசிமாடன், சங்கரன்கோவில்**

**ஒரு சினிமா கிசுகிசு ப்ளீஸ்....?**

கிசுகிசுவெல்லாம் தெரியாது. ஒரு சினிமா செய்தி வேண்டுமானால் சொல்கிறேன். சமீபத்தில் பாலிவுட் அழகியான குஷி முகர்ஜியின் ஜாதகக் கட்டத்தில் சனி மோசமான இடத்தில் வந்து உட்கார்ந்துவிட்டதுபோல. பல கிரிக்கெட் வீரர்கள் தனக்கு மெசேஜ் அனுப்புவர். அதிலும் இந்திய கிரிக்கெட் வீரர் சூர்யகுமார் யாதவ் நிறைய அனுப்புவார் என பிராங்க் பண்ணியிருக்கிறார். விஷயம், சூர்யகுமார் கவனத்துக்குப் போக, உடனடியாக தன் புகழுக்குக் களங்கம் விளைவித்ததாக குஷி முகர்ஜி மீது வழக்குப் பதிவுசெய்து, களங்கமான புகழுக்கு ஈடாக 100 கோடி ரூபாய் நட்ட ஈடு கேட்டிருக்கிறார். ஜாலியா பேசறதா நினைச்சு, வேலியில போற ஓணானைப் பிடிச்சு மடியில விட்டுக்கிட்டோமே என திகைத்து நிற்கிறார் குஷி.



**கே. வல்லவன், பேரணாம்பட்டு**

**இறந்த மகன் அக்னிவேஷ் அகர்வாலின் நினைவாக வருமானத்தில் 75% தானம் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறாரே அனில் அகர்வால்?**

ஒரு நிறுவனத்துக்கு 100 ரூபாய் வருமானம் வந்தால் அதில் 35 அல்லது 40 ரூபாய்தான் லாபமாக இருக்கும். அதிலும் வருமான வரி உள்ளிட்ட வரிகளை அரசுக்குச் செலுத்தியாக வேண்டும். மிச்சமுள்ள பணத்தில் நிறுவனத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு முதலீடு செய்யவேண்டும். அதனால் வருமானத்தில் 75% அல்ல லாபத்தில் 75% தானம்கூட சாத்தியமில்லை. மகனின் மறைவால் உணர்ச்சிவசப்பட்டு அனில் அகர்வால் பேசியிருக்கலாம்.

**வண்ணை கணேசன், பொன்னியம்மன்மேடு**

**சத்தீஸ்கரில் 26 லட்சம் கிலோ நெல்லை எலிகள் தின்றதாக புகார் வந்திருக்கிறதே?**

தின்றது இரண்டு கால் ஊழல் பெருச்சாளிகளாக இருக்கலாம். எலி மீது பழி சொல்லப்பட்டிருக்கலாம்.

**மா.சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்**

**தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இருக்காது என்கிறாரே எடப்பாடி பழனிச்சாமி?**

அது யூகமா, தீர்க்கதரிசனமா, எதிர்பார்ப்பா, ஏக்கமா என்று நமக்குத் தெரியவில்லையே. ஒருவேளை எதிர்காலத்துக்கு தொழிலொன்று கைவசம் இருக்கட்டுமென ஆரூடம் சொல்லிப் பழகுகிறாரோ... என்னவோ?

**ஆ.ஈஸ்வரன், தேவூர்மேட்டுக்கடை**

**கெடுவான் கேடு நினைப்பான் -என்பதெல்லாம் இப்போதும் சாத்தியம்தானா?**

விதைத்ததைத்தான் அறுவடை செய்யமுடியும் என்பது பழமொழி. இப்போதும் நெல் விளைவித்தால் நெல்தானே விளைகிறது. நீங்கள் பிறருக்கு கேடு நினைப்பதென்பதும் ஒரு விதையைப் போன்றதுதான். விதை முளைத்துவர கொஞ்சம் காலமெடுக்கலாம். ஆனால் நிச்சயம் முளைக்கும்.

**கே.எம். ஸ்வீட்முருகன், கரடிகொல்லப்பட்டி**

**ஏ.ஐ.யை கண்மூடித்தனமாக நம்பாதீர்கள் என்கிறாரே சுந்தர்பிச்சை?**

நிஜம்தான். எந்திரம் உத்தரவிட்டதைத்

தான் செய்யும். பகுத்தறியாது. நாலா திக்குகளையும் நோக்கி பரிசீலித்து முடிவெடுக்காது. இன்னொன்று, மனிதனின் உடலுழைப்பு வேலைகளைக் குறைப்பதற்காக எந்திரங்களும் தொழில்நுட்பமும் வந்தது. இன்றைக்கு உடலுழைப்பின்மையே மனிதனின் பிரச்சனையாகிவிட்டது. சிந்தனைக்கு மாற்றாக, ஏ.ஐ.யைப் பயன்படுத்தும் தலைமுறையின் சிந்தனைத் திறனும்கூட பாதிக்கப்படும் சூழல் விரைவில் வரலாம்.

**எச்.முருகன், மன்னார்குடி**

**மரியாதை நிமித்தமான சந்திப்பு என்றால் என்ன?**

நாங்கள் சந்தித்துப் பேசியிருக்கிறோம் என்பதுதான் செய்தி. அதற்குமேல் என்ன பேசினோம் என்பதைக் கிளறி வாயைப் பிடுங்கும் கேள்விகளைக் கேட்காதீர்கள் என்பது அதன் அர்த்தம்.

**ஜெ.மணிகண்டன், பேரணாம்பட்டு**

**காடுவெட்டி குருவின் மகள் விருதாம்பிகை தனிக்கட்சி தொடங்கப்போவதாக அறிவித்துள்ளாரே?**

ஏற்கெனவே பா.ம.க., அன்புமணி பா.ம.க., ராமதாஸ் பா.ம.க.வாக பிளவுபட்டுக் கிடக்கிறது. தமிழக வாழ்வுரிமைக் கட்சி வேல்முருகன் தனி ஆவர்த்தனம் நடத்துகிறார். இப்போது ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சி என்ற கட்சியை விருதாம்பிகை தொடங்கிவிட்டார். வன்னியர் சமூகம் என்கிற குளம் இருக்கிறது. குளத்தில் அவரவர் சாமர்த்தியத்துக்கேற்ப எவ்வளவு முகர முடியுமோ அத்தனைக்கு முகர்ந்துகொள்ளட்டும். ●



கவுதமி

www.nakkheeran.in

# தமிழகத்தின் ஓவைசியா விஜய்?

இனி, பா.ஜ.க.வின் வெற்றிக்காக தமிழகத்தின் ஒவைசியாகவே செயல்படுவார் விஜய்' என அடித்துக் கூறுகிறது பா.ஜ.க. தலைமையகத்திற்கு நெருக்கமான நமது டெல்லி சோர்ஸ்.

சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஒரிரு மாதங்களே உள்ள நிலையில், ஏற்கனவே கூட்டணியில் உள்ள கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணியில் மும்முரமாக இருக்கிறது ஆளுங்கட்சியான தி.மு.க. அதேபோல, தமிழகத்தில் என்.டி.ஏ.விற்கு தலைமை தாங்குவது அ.தி.மு.க.தான் எனக் கூறப்பட்டாலும், தங்களுடைய கூட்டணியில் பிற கட்சிகளை இணைக்க பெரும்பாடுபட்டு வருகிறது பா.ஜ.க.

**'அமலாக்கத்துறையை வைத்து அ.தி.மு.க., பா.ம.க. மற்றும் அ.ம.மு.க.வை தனது கூட்டணி வலைக்குள் சிக்கவைத்த பா.ஜ.க., சி.பி.ஐ. பயத்தைக் காட்டி த.வெ.க.வுடன் தனது அரசியல் டீலிங்கை கச்சிதமாக முடித்துவிட்டது.**



ஓவைசி

## இது நம்மால் முடியும் என்ற நம்பிக்கையோடு ஒவ்வொரு செயலையும் அணுகினால், இமயமலை கூட இடுப்பளவு உயரம்தான்!

ஒன்றிய அமைச்சராக இருந்தபோது மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கிய ஊழல் வழக்கு, பா.ம.க.வின் உரிமை பிரச்சனை உட்பட பல்வேறு சிக்கல்களில் இருக்கும் அன்புமணி, இரட்டை இலை சின்னத்திற்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கு, சட்ட விரோத பணப் பரிமாற்ற வழக்கு, பரப்பன அக்ரஹாரா சிறை வழக்கு என பா.ஜ.க.வின் உடும்புப் பிடியிலிருக்கும் டி.டி.வி. தினகரன் உட்பட சில சிறிய கட்சிகளை சேர்த்துக் கொண்டு மெகா கூட்டணி கனவில் வலம் வருகிறார் அ.தி.மு.க. பொதுச்செயலாளரான எடப்பாடி பழனிச்சாமி.

கடந்த சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியிலிருந்த தே.மு.தி.க. உள்ளிட்ட பல கட்சிகள் இம்முறை அக்கூட்டணியில் இணையுமா என்பதே மோடியின் மதுராந்தக பிரச்சார பொதுக் கூட்டத்திற்கு பின்னரும் கேள்விக்குறியாக இருக்கும் நிலையில்தான், கரூர் நெரிசல் மரணம் தொடர்பாக நடந்துவரும் சி.பி.ஐ. விசாரணையைக் காட்டி தமிழக வெற்றிக் கழகத்தை பா.ஜ.க. மேலிடம் தங்களுக்கு சாதகமாக வளைத்துள்ளதாகவும், நடிகர் விஜய்யும் அதற்கு ஓ.கே. சொல்லிவிட்டதாகவும் கசியும் தகவல்கள்தான் கமலாலய வட்டாரத்தில் தற்போதைய 'ஹாட் டாபிக்'.

'என்ன நடந்தது டெல்லியில்?' என்பதை அறிவதற்காக, பா.ஜ.க.வின் நிழலில் இருக்கும் நமக்கு நெருக்கமான பொலிட்டிகல் சோர்ஸிடம் பேசினோம்...

தற்போதைய நிலவரப்படி டெல்லி, புதுச்சேரி என 2 யூனியன் பிரதேசங்கள், 19 மாநிலங்கள் என இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் பா.ஜ.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் ஆட்சியில் இருந்தாலும், தென் மாநிலங்களில் அதுவும் தமிழகத்தில் தனது ஆட்சியை அமைக்கவேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் நூற்றாண்டுக் கனவு. அதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது திராவிட இயக்கங்கள்தான். தற்போதைக்கு, அ.தி.மு.க. என்ற திராவிட இயக்கத்தை பிளவுபடுத்தி அதன் 90 சதவீத கட்டுப்பாட்டை பா.ஜ.க. எடுத்துவிட்டது என்பது அரசியல் புரிந்த அனைவருக்குமே தெரியும். அதனால்தான், 'தமிழகத்தில் எங்கள் கூட்டணி ஆட்சிதான் அமையும்' என பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளர் பியூஷ்கோயல் கூறும்போது, எதிர்பேச்சு பேசாமல் மௌனம் காத்தார் எடப்பாடியார்.

அதேபோல, ஊழல் வழக்குகளில் சிக்கிய மாற்றுக்கட்சிகளை சேர்ந்த இரண்டாம் கட்ட அரசியல் தலைவர்களையும், ஒருசில காங்கிரஸ் புள்ளிகளையுமே தங்களது பிடிக்குள் கொண்டு வந்து விட்டது பா.ஜ.க.


தினகரன்


அன்புமணி

இப்படி, அனைத்து விசயங்களுமே தங்களுக்கு சாதகமாக இருந்தாலும், மக்களுக்கு தி.மு.க. அரசின் மீதான நம்பிக்கையும், பா.ஜ.க. மீதான வெறுப்பும் தமிழகத்தைப் பொறுத்தவரை பாரதிய ஜனதா கட்சிக்கு பாதகமான சூழல் இருப்பதை டெல்லி மேலிடம் நன்றாகவே உணர்ந்துள்ளது. எனவே, மிரட்டியோ, உருட்டியோ அ.தி.மு.க. உட்பட சில கட்சிகளை தங்களது என்.டி.ஏ. கூட்டணிக்குள் கொண்டுவந்துவிட்டாலும் அதைவைத்து மட்டுமே தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பதும் டெல்லி மேலிடத்திற்கு நன்கு தெரியும்.

எனவே, பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகள் பிளஸ் தி.மு.க., அ.தி.மு.க.வின் அதிருப்தி வாக்குகள் ஆகியவற்றை சேகரிப்பதற்காக ஏகப்பட்ட சுவீட் பாக்ஸ்களை அள்ளிக்கொடுத்து பா.ஜ.க.வின் முன்னாள் தலைவர் ஒருவர் மூலமாக முதலில் வளைக்கப்பட்டார் சீமான். அதன்பிறகுதான், ஆடிட்டரே போற்றும் அளவுக்கு

www.nakkheeran.in

உன் ரகசியங்களை பிறருடன் பகிர்ந்துகொள்ளாதே... அது உன்னை அழித்துவிடும் -நீயே காப்பாற்ற முடியாத ரகசியத்தை, மற்றவர்கள் வெளியே சொல்லாமல் இருப்பார்கள் என எதிர்பார்க்காதே!

பாரம்பரியமாக கடைப்பிடித்து வந்த சில கொள்கைகளை மாற்றிக்கொண்டது நாம் தமிழர் கட்சி.

இப்படி, சிதறும் வாக்குகளை சேகரிக்கவும், தி.மு.க.வுக்கு எதிராகப் பேசி நடுநிலையோடு இருக்கும் இளைஞர் வாக்குகளை ஈர்க்கும் களமாகவும் மாற்றப் பட்டது நாம் தமிழர் கட்சி. எப்போதும் போல இம்முறையும் அவர் தனித்துப் போட்டியிட்டாலும், தேர்தலுக்குப் பிறகு என்.டி.ஏ. கூட்டணிக்கு ஆதரவளிப்பது தான் அவரது நோக்கம். அதுதான் அசைன்மெண்ட்.

இதற்கிடையே, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அரசியல் ஆசையோடு டெல்லியில் உள்ள காங்கிரஸ் மேலிடத்தை அணுகிய நடிகர் விஜய்க்கு, அக்கட்சியின் கதவுகள் அப்போது திறக்காததால் 'கொள்கை எதிரி பா.ஜ.க; அரசியல் எதிரி தி.மு.க.' என்ற கோஷத்தோடு தமிழக வெற்றிக் கழகத்தை துவக்கிய விஜய், கரூர் பிரச்சார நெரிசல் மரண வழக்கில் சி.பி.ஐ.யிடம் வசமாக சிக்கிக்கொண்டார். அது தொடர்பான முதற்கட்ட விசாரணையிலேயே, 'நல்லா யோசிச்சு சொல்லுங்க விஜய்..' என ஆப்சன் கொடுத்து அனுப்பிவிட்டனர் அதிகாரிகள்.


சீமான்

அடுத்து, கடந்த 19ஆம் தேதி நடந்த இரண்டாம்கட்ட விசாரணைக்காக 18ஆம் தேதி இரவே டெல்லி வந்த விஜய்யை, அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கே நேரில் சென்று சந்தித்திருக்கிறார் தமிழகத்தைச் சேர்ந்த கட்டுமான நிறுவன அதிபரும், அமித்ஷா குடும்பத்திற்கு நெருக்கமானவருமான பாஷ்யம் அபினேஷ். இப்போது மட்டுமல்ல; இனி எப்போதுமே பா.ஜ.க.வுடன் ஒட்டோ, உறவோ கிடையாது எனச் செல்லுமிடமெல்லாம் கூவிக்கொண்டிருந்த எடப்பாடி பழனிச்சாமியை பா.ஜ.க.வுடன் ஒட்டவைத்த 'கீ பெர்சனும்' அவர்தான். விஜய்யுடனான அந்த சந்திப்பின்போது பா.ஜ.க.வின் அதிமுக்கியப் புள்ளி ஒருவரும் அபினேஷ் மூலமாக விஜய்யுடன் வீடியோகாலில் பேசியிருக்கிறார். அப்போது, தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அழைப்பு விடுத்த நிலையில், 'ஒரு ரெண்டுநாள் மட்டும் டைம் கொடுங்க ப்ளீஸ்..' எனக் கூறியிருக்கிறார் விஜய்.

அதனடிப்படையில்தான், மறுநாள் நடந்த சி.பி.ஐ. விசாரணையில் கேட்கப்பட்ட சில கேள்விகள் மீடியாக்களுக்கு கசியவிடப்பட்டு, 'கைதாகிறார் விஜய்!' என மரணபீதியை ஏற்படுத்தியிருக்கின்றனர் அதிகாரிகள். விசாரணை முடிந்து பதற்றத்தோடு தமிழகம் வந்த விஜய்யிடம், மைலாப்பூரைச் சேர்ந்த முக்கியப்புள்ளி ஒருவரும் பேசி, பா.ஜ.க. சார்பாக சில வாக்குறுதிகளையும் கொடுத்திருக்கிறார். அதன் பிறகுதான் அந்த முக்கிய முடிவை எடுத்திருக்கிறார் விஜய்.

அதன்படி, இப்போதைக்கு தனித்தோ அல்லது வேறு கட்சிகளை கூட்டணியில் இணைத்துக் கொண்டோ 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர் கொள்ளும் த.வெ.க., தேர்தல் முடிவிற்குப் பிறகு என்.டி.ஏ. கூட்டணி ஆட்சி அமைய ஆதரவளிப்பது என 21ஆம் தேதி முடிவு செய்தாராம் விஜய். அந்த தகவல் உடனடியாக டெல்லிக்கு பாஸ்பண்ணப் பட்டது. அதன் பிறகுதான், 'த.வெ.க. தனித்தே போட்டியிடும், விஜய் கை காட்டுபவர்தான் வெற்றிபெற முடியும்' என மீடியாக்களிடம் பேட்டி கொடுத்தார் செங்கோட்டையன். அடுத்த சிலமணி நேரங்களில் 'விசில்' சின்னத்தை ரிலீஸ் செய்துவிட்டது தேர்தல் ஆணையம்.

ஆகமொத்தத்தில்... 'இஸ்லாமிய சிறுபான்மையினரின் வாக்குகளை பிரித்து வட மாநிலங்களில் பா.ஜ.க.வின் வெற்றிக்கு உதவும் ஒவைசியைப் போல இஸ்லாமிய, கிறித்துவ சிறுபான்மை வாக்குகளை அறுவடை செய்து பா.ஜ.க.வின் கூட்டணிக் கூடையில் கொட்டத் தயாராகிவிட்டார் ஜனநாயகன்' என அதிர வைத்தனர் நம்மை.

ஆக, தமிழகத்தின் ஒவைசியா விஜய்..?!

**-துரை.மகேஷ்**

அருட்பெருஞ்ஜோதி
சிவவழிபாடு போற்றும்
108 சிவ ஸ்தலங்கள்
போற்றிப் பாதுகாக்க வேண்டிய பேரருட்தொகுப்பு!
இலவச இணைப்பு புத்தகம்!

ஓம் சரவணபவ

2026
பிப்ரவரி
இதழில்...




படிக்கத்
தவறாதீர்கள்!

Advt



மாளவிகா மோகனன்

## மீண்டும் தெலுங்கு!

தெலுங்கில் சரசரவென முன்னேறிய நடிகை க்ரித்தி ஷெட்டி, தமிழில் சரிவை சந்தித்து வருகிறார். இவர் கமிட்டான மூன்று படங்களும் தொடர் பிரச்சனையில் சிக்கிவருகிறது. இதில் கார்த்தியுடன் நடித்த 'வா வாத்தியார்' மட்டும் பல்வேறு சிக்கல்களை தாண்டி கடந்த பொங்கலுக்கு வெளியான போதும், போதிய வரவேற்பை பெறவில்லை. மீதமுள்ள இரண்டு படங்களில் 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' தயாராகியும், ரிலீஸுக்கு தள்ளிப்போகிறது. இன்னொரு படமான 'ஜீனி' எந்த நிலையிலிருக்கிறது எனத் தெரியவில்லை. இதனால் மீண்டும் தெலுங்கு பக்கம் திரும்பியுள்ளார் க்ரித்தி ஷெட்டி. அங்கு சிரஞ்சீவி நடிக்கும் புது படத்தில் மகள் கதாபாத்திரத்திற்கு நடிக்க ஓ.கே. சொல்லியுள்ளார். தனது இமேஜ் தொடர்ந்து சரிந்து வருவதால் அதை மீட்டெடுக்கவே இந்த முடிவாம். நாயகியாக இல்லாமல் கதையில் முக்கியத்துவம் இருக்கும் கதாபாத்திரத்திற்கு இனி முன்னுரிமை கொடுக்க முடிவெடுத்துள்ளாராம். ஏற்கனவே சிரஞ்சீவியை வைத்து 'வால்டர் வீரய்யா' படத்தை இயக்கிய பாபி கொல்லி இப்படத்தை இயக்குகிறார். இசைக்காக ஏ.ஆர்.ரகுமானிடம் பேச்சுவார்த்தை நடக்கிறது.

## வாரிசு நடிகர்!

பிரபல நடனக் கலைஞர் பிரபுதேவாவின் மகன் ரிஷிராகவேந்திரா தேவா. இவரை கடந்த ஆண்டு சென்னையில் தனது தலைமையில் நடைபெற்ற நேரடி நடன நிகழ்ச்சியில் பிரபுதேவா அறிமுகப்படுத்தியிருந்தார். அதில் தந்தையோடு 'பேட்ட ராப்' பாடலுக்கு இவர் நடனமாடியிருந்தார். இது பலரது கவனத்தை பெற்ற நிலையில், அது தற்போது ஹீரோவாக நடிக்கும் அளவிற்கு சென்றுள்ளது. இவர் தற்போது சுதா கொங்கராவின் உதவி இயக்குநர் ஒருவரின் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். தந்தையைப்போல் இவரும் நடனத்தில் தீவிர ஈடுபாட்டோடு இருப்பதால், அதற்கு இடமளிக்கும் வகையில் படத்தில் இரண்டு பாடல்கள் இருப்பதாக சொல்கின்றனர். விரைவில் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது. இதனால் தந்தையிடம் டிப்ஸும் பயிற்சியும் எடுத்து வருகிறார் ரிஷிராகவேந்திரா தேவா.

## குவியும் வாய்ப்பு!

தனது செகண்ட் இன்னிங்ஸில் ஏராளமான படங்களில் நடித்துவந்த சிம்ரன் இதுவரை முக்கிய கதாபாத்திரம் மற்றும் சிறப்பு தோற்றத்திலே அதிகம் நடித்துவருகிறார். ஆனால் சமீபத்தில் நடித்த 'டூரிஸ்ட் ஃபேமிலி' படத்தில் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இப்படத்தின் வெற்றியால் அவருக்கு தொடர்ந்து முதன்மை கதாபாத்திரம் வந்து குவிகிறது. ஆனால் அதை அளவோடு தேர்ந்தெடுத்து சம்மதம் தெரிவிக்கிறார் சிம்ரன். இதனிடையே ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்க ஓகே சொல்லியுள்ளார் சிம்ரன். கவின் - பிரியங்கா மோகன் நடிப்பில் உருவாகும் இன்னும் பெயரிடப்படாத படத்தில் நடிக்கிறார். இவர் சம்பந்தமான படப்பிடிப்பு உடனடியாக தொடங்கி சென்னையில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

## வானத்தில் ஃபைட்!

கார்த்தி -பி.எஸ்.மித்ரன் கூட்டணியில் பல மாதங்களாக உருவாகிவரும் படம் 'சர்தார் 2'. பெரும் பொருட்செலவில் பிரம்மாண்டமாக

உருவாகி வருவதால் இந்தியாவைத் தாண்டி சீனா, கம்போடியா, அஜர்பைஜன், பாங்காங் என பல்வேறு நாடுகளில் படமாக்கி வருகின்றனர். படத்தின் முழு படப்பிடிப்பும் கடந்த ஆண்டு ஜூனில் நிறைவு பெற்றதாக அறிவிக் கப்பட்ட நிலையில், அது இன்னும் முடியவில்லை என ஒரு லேட்டஸ்ட் தகவல் வெளியாகி யுள்ளது. சமீபத்தில் ஒரு ஆக்ஷன் காட்சியை படக்குழு படமாக்கியுள்ளதாம். அதாவது, நடுவானில் விமானத்திற்குள் சண்டை நடப்பது போலவும், அதில் கார்த்தி மற்றும் மாளவிகா மோகனன் நடித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த காட்சிக்காக இரண்டுபேரும் கடுமையான உடற் பயிற்சியும், நிறைய முறை ரிகர்சல் எடுத்தும் நடித்துள் ளனராம். இது படத்தின் சிறப்பு பகுதிகளில் ஒன்றாக இருக்கும் எனச் சொல் கிறார்கள். இதனால் படம் இன்னும் முழுமையாக நிறை வடையவில்லை எனத் தெரி யும் சூழலில், இது குறித்து விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

-கவிதாசன் ஜெ.



க்ரித்தி ஷெட்டி

www.nakkheeran.in

# நட்சத்திர தொகுதியில்

# மின்னப்போவ

-திரு



கலியபெருமாள்



சில்பி சகானா



ராஜன்



செல்வம்

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள 8 சட்டமன்றத் தொகுதிகளில் திருவண்ணாமலை தொகுதி தான் நட்சத்திர தொகுதி. இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் தமிழ்நாட்டின் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு. இத்தொகுதியில் மட்டும் தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.



கடந்த தேர்தலின்போது, பிரதான தேர்தல் வாக்குறுதிகளாக, புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தரப்படும், அண்ணா மலையார் கோவில் மாடவீதி, திருப்பதி போல் மாற்றப்படும், புதிய காய்கறி - பூ மார்க்கெட் அமைத்துத் தரப்படும், கோவிலுக்கு யானை வாங்கித் தரப்படும், மாநகராட்சியாக தரமுயர்த்தப்படும், சாலைகள் மேம்படுத்தப்படும் என வாக்குறுதிகளை தந்திருந் தார். சொன்னதில், 50 கோடி ரூபாயில் புதிய பேருந்து நிலையம் கட்டித் திறக்கப்பட் டுள்ளது. 30 கோடியில் மாடவீதி சிமெண்ட் சாலை அமைத்துள்ளார். 29.5 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த காய்கறி, பூ மார்க்கெட் கட்டித் தந்துள்ளார். டைட டல் பார்க், மீன் அங்காடி கட்டப்பட்டுள்ளன. கிரிவலப் பாதையில் குடிநீர் சுத்தி கரிப்பு நிலையங்கள் அமைக் கப்பட்டுள்ளது. கிரிவலப் பாதையில் 64 கோடியில் தங்கும் விடுதிகள் கட்டப் பட்டுவருகின்றன. சிட்கோ தொழிற்பேட்டை, விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என முத லமைச்சர் அறிவிப்பு செய்துள் ளார். நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக இருப்பதால் திருவண்ணாமலை நகரத் துக்கு வரும் 9 தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் அனைத்தும் பக்காவாக



www.nakkheeran.in

போடப்பட்டுள்ளன. கிராமப்புற சாலைகளும் போடப்பட்டுள்ளன. அதேவேளை திருவண்ணாமலை மாநகரத்தில் கால்வாய் அமைக்கும் பணிகள் ஆமை வேகத்தில் நடப்பதால் மாநகரச் சாலைகள் கந்தல்கோலமாகவுள்ளன. மாநகரின் போக்குவரத்துப் பிரச்சனை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது, இதை சீர்படுத்தாமலிருப்பது மக்களிடம் அதிருப்தியை உருவாக்கியுள்ளது. கிராமப்புற பிரச்சனைகளில் அமைச்சர் சொல்வது நடப்பதில்லை என்கிறார்கள்.

தி.மு.க. நிர்வாகிகள் நம்மிடம், “தொகுதிக்கு சம்பந்தமில்லாத நிர்வாகிகளை திருவண்ணாமலை ஒன்றிய

# ...து யார்?

## ...வண்ணாமலை தொகுதி நிலவரம்!

பகுதிகளின் தேர்தல் பணிக்குழுவில் நியமித்துள்ளார் அமைச்சர். அவர்களில் சிலருக்கு தேர்தல் அனுபவமே கிடையாது. இதைத்தான் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எங்கள் தேர்தல் வேலையில் என்ன குறைகண்டார்?” என்கிறார்கள்.

இத்தொகுதியில் அமைச்சர் வேலுதான் மீண்டும் வேட்பாளர் என்பதால் தி.மு.க.வில் மற்றவர்கள் இங்கே போட்டியிடும் பேச்சுக்கே இடமில்லை. கடந்த சட்டமன்றத் தேர்தலில் 94,673 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர், வரும் தேர்தலில் ஒரு லட்சமாக வித்தியாசத்தை உயர்த்தத் திட்டமிட்டு செயல்பட்டுவருகிறார். அ.தி.மு.க.வில் 61 பேர் விருப்ப மனு தந்துள்ளனர். இவர்களில் 15 நிர்வாகிகள் தங்களுக்காக மனு தந்துள்ளனர். தங்களுக்கு கேட்பதைவிட யாருக்கு தரக்கூடாது என ஒவ்வொரு கோஷ்டியும் சதுரங்க ஆட்டம் ஆடிவருகின்றனர். அக்ரி.கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரன் இருவரில் ஒருவரை திருவண்ணாமலையில் நிற்கச்சொன்னார் இ.பி.எஸ். அவர்கள் இருவருமே மறுத்ததோடு, தங்கள் சார்பில் ஆளுக்கு ஒருவரை முன்னிறுத்தியுள்ளனர். அக்ரி.கிருஷ்ணமூர்த்தி தனது ஆதரவாளரான, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த திருவண்ணாமலை ஒ.செ. கலியபெருமாளை முன்னிறுத்துகிறார். ராமச்சந்திரன் தன் சார்பாக மாநகரச் செயலாளர் செல்வத்தை முன்னிறுத்துகிறார். 2016-ல் திருவண்ணாமலை தொகுதியில் நின்று தோல்வியடைந்த பெருமாள்நகர்.ராஜனும் சீட் கேட்கிறார். இம்மூவரைத் தாண்டி, மாவட்ட இணைச்செயலாளர் சில்பி.சகானா, இளைஞர் பாசறை மா.செ. டிஸ்கோ.குணசேகரன் எனச் சிலர் முயற்சிக்கிறார்கள்.


சீட் வேண்டுமென்பவர்கள் 10 கோடி ரூபாயை தலைமையிடம் டெபாசிட் செய்ங்க என இ.பி.எஸ். சொல்வதால், ‘அமைச்சர் வேலு அளவுக்கு என்னால் செலவு செய்ய முடியாது, தலைமை செலவு செய்வதாக இருந்தால் நான் நிற்கிறேன்’ என்கிறார் ராஜன். மாநகர செயலாளர் செல்வமோ, ‘எங்கிட்ட அவ்வளவு பணமில்லை’ எனத் தப்பிக்கப் பார்க்கிறார். மற்ற நிர்வாகிகளோ, 10 கோடியா என மலைப்பாகப் பார்க்கின்றனர். அதே நேரத்தில், கலியபெருமாளுக்காக நான் பணம் கட்டுகிறேன் என முன்வரும் அக்ரி. கிருஷ்ணமூர்த்தியை பார்த்து பலருக்கும் ஆச்சர்யம்.

நம்மிடம் பேசிய நிர்வாகிகள், “நாடாளுமன்றத் தேர்தலில் நின்று தோல்வியடைந்து பணமில்லாமல் மூன்று ஆண்டுகளாக ஹோட்டல் கட்டுமானப் பணியை முடிக்கமுடியாமல் பாதியில் நிறுத்திவைத்துள்ளார் கலியபெருமாள். ‘அவருக்காக 10 கோடி ரூபாயை நான் கட்டுகிறேன்’ என அக்ரி.கிருஷ்ணமூர்த்தி சொல்வது ஆச்சர்யமாக இருக்கிறது” என சந்தேகம் கிளப்புகிறார்கள்.

அ.தி.மு.க.வுடன் அன்புமணி பா.ம.க. கூட்டணி வைத்துள்ளது. கீழ்பென்னாத்தூர் தொகுதியை கேட்கிறார் அன்புமணி. அதை ஒதுக்கும்பட்சத்தில் திருவண்ணாமலை வேட்பாளராக அ.தி.மு..க. கிழக்கு மா.செ. ராமசந்திரனை களமிறக்குவார் இ.பி.எஸ். என்கிறார்கள் அ.தி.மு.க. வட்டாரத்தில். பா.ஜ.க. தரப்பிலும் இந்த முறை சீட் வாங்க முயற்சிக்கிறார்கள்.

இத்தொகுதியில் வன்னியர்கள், பட்டியல் சமூகத்தினர், முதலியார்கள் வலிமையாக உள்ளார்கள். வெற்றியைத் தீர்மானிப்பதில் சிறுபான்மையினரின் வாக்குகளுக்கு முக்கிய பங்குள்ளது. திராவிட அரசியலில் முக்கியமான பகுதி திருவண்ணாமலை. இங்கு தி.மு.க. பலமாக உள்ளதால் இந்த நட்சத்திரத் தொகுதியில் உதயசூரியன் பிரகாசிக்கிறது.

**-து.ராஜா.**



எ.வ.வேலு

www.nakkheeran.in


பா.ஜ. ஆட்சியில் ஒரு சங்கராச்சாரியாருக்கு பிரச்சனை என்பதை நம்பமுடிகிறதா?

உத்தரகாண்டின் ஜோஷிபீட சங்கரமடத்தின் தலைவர் அவிமுக்தேஷ்வரானந்தா சரஸ்வதி. முந்தைய சங்கராச்சாரியாரான சுவாமி சொரூபானந்த சரஸ்வதியின் மறைவுக்குப் பின் இவர் மடத்தலைவராக வந்தார். இவருக்கும் பா.ஜ.க.வுக்கும் ஏனோ சில உரசல்கள் தொடர்ந்து நீடித்துவந்தன. மற்ற சங்கராச்சாரியார்களைப் போல, பா.ஜ.க. தலைவர்களின் கருத்துக்களுடன் உடன்படாமல் சுயேட்சையாக சில கருத்துகளைப் பேசிவந்தார்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டு, அந்த இடத்தில் அயோத்தி ராமர் கோவில் கட்டப்பட்டு பிரதிஷ்டை விழா 2024-ஆம் ஆண்டு நடைபெற்றது. அதுகுறித்து அவிமுக்தேஷ்வரானந்தா, ‘இதனால் அரசியல்மயப்படுத்தப்பட்ட இந்துக்கள்தான் மகிழ்ச்சியடைந்தனர். உண்மையான இந்துக்கள் மகிழ்ச்சியடைய வில்லை’ என கருத்துத் தெரிவித்திருந்தார். அதேபோல கோவில் பணிகள் முழுமையடையாமல், பிராண பிரதிஷ்டை நடைபெறாத நிலையில், ராமர் கோவிலுக்கு மோடி சென்றதையும் சாஸ்திரத்துக்கு விரோதமானது என விமர்சித்திருந்தார்.

2024-ல் ராகுல் காந்தி நாடாளுமன்ற உரையொன்றின் போது, “தங்களை இந்துக்கள் என்று அழைத்துக்கொள்பவர்கள் வன்முறை, வெறுப்பு மற்றும் பொய்களை இருபத்துநான்கு மணி நேரமும் பரப்புகிறார்கள். இங்கே அமர்ந்திருப்பவர்களில் பலர் உண்மையான இந்துக்கள் இல்லை'' என விமர்சித்தார். இதுகுறித்து கருத்துத் தெரிவித்த ஜோஷிமட சங்கராச்சாரியரான இவர்... “ராகுல், இந்துக்கள் குறித்து எதுவும் தவறாகக் கூறிவிட வில்லை” எனத் தெரிவித்திருந்தார்.

அதேபோல பசுமாட்டு இறைச்சி ஏற்றுமதிக்கு எதிராகப் பேசும்போது, “லக்னோ பூங்காக்களில் யானை சிலை இருக்கிறது. இதை யானை என்பார்கள். இதனால் நடக்க முடியுமா? கிளையை முறிக்க முடியுமா ? அதேபோல



சீடர்களைத் தாக்கும் போலீஸ்



அவிமுக்தேஷ் வரானந்தா

www.nakkheeran.in

**மகிழ்ச்சி, நம்பிக்கை, வெற்றி, அன்பின் விதைகளை நடவு செய்யுங்கள் -இவை அனைத்தும் உங்களிடத்தில் ஏராளமாக திரும்பி வரும்... இது இயற்கையின் விதி!**

பசு இறைச்சி விற்பனையைத் தடுக்காதவர்கள் அவர்கள் பிரதமராக இருந்தாலும், குடியரசுத் தலைவராக இருந்தாலும் உண்மையான இந்துவாக இருக்கமுடியாது" எனப் பேசியது சர்ச்சையானது.

இதுபோன்ற முந்தைய சர்ச்சைகளால் சங்கராச்சாரியார் அவிமுக்தேஷ்வரானந்தாவிடம் உத்தரப்பிரதேச பா.ஜ.க. அரசு கடும் கோபத்தில் இருந்தது. இந்நிலையில் ஜனவரி 18-ஆம் தேதி, மௌனி அமாவாசை தினம். அன்று பிராயாக்ராஜ் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி, சில சடங்குகளைச் செய்வது நல்லது என்பது இந்துக்களின் நம்பிக்கை. அதற்காக வருகைதந்த அவிமுக்தேஷ்வரானந்த் தடுத்துநிறுத்தப்பட்டார். போலீசுடன் தள்ளுமுள்ளுவில் ஈடுபட்ட அவரும் அவரது சீடர்களும் போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

உத்தரப்பிரதேச அரசு, 'ஜோதிஷ் பீடத்தின் சங்கராச்சாரியார் யார் என்பது குறித்து 2020 முதலே உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு இருக்கிறது. அது முடிவுக்கு வரும்வரை அவிமுக்தேஷ்வரானந்த் சங்கராச்சாரியார் பட்டத்தை எப்படிப் பயன்படுத்தலாம்? அப்படி சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட ஆவணம் இருந்தால் காட்டுங்கள் எனக் கேட்டிருந்தது. அதை அவிமுக்தேஷ்வரானந்தா காட்டியபோதும் காவல்துறை ஏற்றுக்கொள்ளவில்லை.

'உங்களை ஏன் மேளாவிலிருந்து தடுத்து திருப்பியனுப்பக்கூடாது?' என அரசு நிர்வாகம் நோட்டீஸ் அனுப்ப, பதிலுக்கு அவிமுக்தேஷ்வரானந்தா 8 பக்க பதிலை அனுப்பி, நோட்டீஸை திரும்பப்பெறக் கோரினார். இல்லையெனில் சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்றும் எச்சரித்தார். இது பழங்கால மரபுகளில் தலையிடுவது என்றும், அரசுக்கும் காவல்துறைக்கும் சங்கராச்சாரியார் யார் என முடிவுசெய்ய உரிமை இல்லை என்றும் கூறினார்.

"சங்கராச்சாரியார் அல்லாத ஒருவர் ஏன் அந்தப் பட்டத்தைப் பயன்படுத்துகிறார் என்று நீங்கள் கேட்கிறீர்கள். பூரியின் சங்கராச்சாரியார் இங்கு இருக்கிறார், அவருக்கு ஒரு முகாமும் உள்ளது. அவரது முகாமிற்கு அருகில், மற்றொரு பூரி சங்கராச்சாரியாரான அதோக்ஷஜானந்த் தேவ் தீர்த்த மகாராஜ், கோவர்தன் பீட சங்கராச்சாரியாரின் பெயர்ப் பலகையும் உள்ளது. பூரியில் எப்படி இரண்டு சங்கராச்சாரியார்கள் இருக்க முடியும்?" என்று கேள்வியெழுப்பினார். இதையடுத்து அவிமுக்தேஷ்வரானந்தா 48 மணி நேரமாக அந்த இடத்திற்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்த விவகாரம் உத்தரப் பிரதேசத்தில் பரபரப்பைக் கிளப்பிய நிலையில், சமாஜ்வாதி கட்சித் தலைவரான அகிலேஷ் யாதவ், "சங்கராச்சாரியார் அவிமுக்தேஷ்வரானந்தாவுக்கு தன் ஆதரவைத் தெரிவித்துள்ளதுடன், 'சங்கராச்சாரியாரிடம் யோகி அரசு மன்னிப்புக் கேட்கவேண்டும்" என குரல்கொடுத்துள்ளார். காங்கிரஸ் செய்தித் தொடர்பாளரான பவன் கெரா, 'பாரதிய ஜனதா கட்சி இரட்டை வேடம் போடுவதாக' குற்றம்சாட்டினார். "ஒரு காலத்தில் முஸ்லிம்களிடம் 'ஆவணங்களைக் காட்டுங்கள்' என்று கேட்டவர்கள், இப்போது இந்து மதத்தின் உயர்மட்டத் துறவியிடமும் அதையே கேட்கிறார்கள். அவர் அரசாங்கத்தை கேள்வி கேட்காதவரை, ஒரு சங்கராச்சாரியாராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். இப்போது அவரிடமிருந்து ஆவணங்கள் கேட்கப் படுகின்றன'' என்று விமர்சனத்தை முன்வைத்தார்.

ஆக, இந்துக்களுக்கு ஆதரவான அரசானாலும்கூட, அரசினை கேள்வி கேட்டாலோ, அதிகாரத்தைக் கேள்வியெழுப்பினாலோ சங்கராச்சாரியாராக இருந்தாலும் இடது கையில்தான் டீல் செய்வோம் என நிரூபித்திருக்கிறது யோகி அரசு என விமர்சனம் எழுந்திருக்கிறது.

**-க.சுப்பிரமணியன்**

# சங்கராச்சாரியாருக்கு அடி, உதை! சர்ச்சையில் யோகி அரசு!

சௌகார் ஜானகி லைஃப் ரிலே! 30

## நான் பட்டு மாமி பேசுறேன்...!

# எம்.ஜி.ஆருக்கு அடுத்து சௌகார் ஜானகியா? ஜெயலலிதா போட்ட சண்டை!


ஒளி விளக்கில் எம்.ஜி.ஆருடன் -நான்

**ந**டிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களின் நடிப்பை நான் பெரிதும் ரசித்துப் பார்ப்பேன். 'படிக்காத மேதை'யில் அவருக்கு வித்தியாசமான வேடம். வெளியுலகமே தெரியாத, சூதுவாது அறியாத வெள்ளை மனம் கொண்ட ரங்கன் எனும் கதாபாத்திரம். 'உனக்கு ஒரு கல்யாணம் செஞ்சு வச்சாதான் நீயும் உலகத்தைத் தெரிஞ்சுக்க முடியும்' என்று பெரியவர் ரங்காராவ் சொல்லும்போது, ரங்கனாக நடிக்கும் சிவாஜி குழந்தைத்தனமாக 'இப்ப எனக்கு மட்டும் சோறு போடுறீங்க, கல்யாணம் செஞ்சு வச்சா நீங்கதான் எங்க ரெண்டு பேருக்கும் சோறு போடணும்' என்று கூறும், அவருடைய அந்த வெகுளித்தனமான பேச்சும், சிரிப்பும், நடிப்பும் என்னை வெகுவாகக் கவர்ந்தது.

'பாலும் பழமும்' படத்தில் கவியரசு கண்ணதாசனின் தத்துவப் பாடல்களுடன் நடிகர் திலகத்தின் குணச்சித்திர நடிப்பும் ஒன்றுசேர்ந்து படத்தை தூக்கி நிறுத்தியது. 'எலும்புக்கும் சதைக்கும் மருத்துவம் கண்டேன் இதற்கொரு மருந்தைக் கண்டேனா' என்று சிவாஜி துயரக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே பாடி நடித்தபோது, கரையாத உள்ளமும் கரைந்து கண்ணீர் சிந்தும் நிலையை உருவாக்கிக் காட்டியிருந்தார்.

'பாலும் பழமும்' போலவே 'பார்த்தால் பசி தீரும்' படத்தில் இடம்பெற்ற கவியரசு கண்ணதாசனின் பாடல்களும் மனதுக்கும் காதுக்கும் இனிமை சேர்த்தன. குறிப்பாக...

**'உள்ளம் என்பது ஆமை, அதில் உண்மை என்பது ஊமை'**

**'கொடியசைந்ததும் காற்று வந்ததா? காற்று வந்ததும் கொடியசைந்ததா?'**

**'அன்று ஊமைப் பெண்ணல்லோ'**

**'யாருக்கு மாப்பிள்ளை யாரோ அவர் எங்கே பிறந்திருக்கின்றாரோ..?'**

போன்ற பாடல்கள் படத்தின் வெற்றிக்கு பெரிதும் பயன்பட்டன.

இந்தப் படத்திற்கு சிவாஜி கணேசனின் ஆஸ்தான இயக்குனரான திருலோகசந்தர் கதை எழுத, ஆரூர்தாஸ் வசனத்தில், திரைக்கதை அமைத்து பீம்சிங் இயக்கினார்.

இந்த மூவரும் சிவாஜியின் இனிய நண்பர்கள். அவரது முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்கள் என்பது நான் சொல்லித் தெரியவேண்டும் என்பதில்லை. 'பார்த்தால் பசி தீரும்' 1962ஆம் ஆண்டு பொங்கல் திருநாளில் வெளிவந்தது. சி.ஆர்.பசவராஜ் தயாரித்தார். ஏவி.எம். நிறுவனம் படத்தை வெளியிட்டது. அதன் வெற்றிக்குப் பின்னால் ஏவி.எம்.மின் விளம்பர


–எழுத்த
கலைமா
சபீதா ஜே

www.nakkheeran.in






'ஒளி விளக்கு' படத்தில்
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா

யுக்தி இருந்தது என்றால் மிகையாகாது. இதில் ஜெமினிக்கு ஜோடியாக நானும், சாவித்திரியும், சிவாஜிக்கு ஜோடியாக சரோஜாதேவி, தங்கவேலுக்கு ஜோடியாக எம்.சரோஜா ஆகியோர் நடித்தோம். இதில் குட்டிப்பையன் கமலஹாசன் சாவித்திரிக்கும், எனக்கும் மகனாகத் தோன்றினார். அப்போதே அவர் நடிப்பில் படுசுட்டி. அவருடைய முதல் இரட்டை வேட படம் இதுதான். ராணுவ வீரர்களின் வாழ்க்கையை, காதலைச் சொல்லும் குடும்பச் சித்திரமான 'பார்த்தால் பசி தீரும்' மிகப்பெரிய வெற்றியை ஈட்டியது.

அதே ஆண்டு மார்ச் மூன்றாம் நாள் 'பவித்ர பிரேமா' என்ற பெயரில் தெலுங்கில் வெளிவந்து அங்கும் வெற்றி பெற்றது. மரம் சும்மா இருந்தாலும் காற்று விடாது என்பார்கள். அப்படித்தான் சினிமா அமைதி யாக இருந்தாலும் சர்ச்சைகள் சும்மா இருக்கவிடாது.



ாக்கம்
மணி
ஜாசப்

'பார்த்தால் பசி தீரும்' படத்திலும் ஒரு பெரிய சர்ச்சை எழுந்தது. அதற்கு காரணம் நடிகைகளான நாங்கள்தான். இந்தப் படத்தில் மூன்று முன்னணி கதாநாயகிகள். சாவித்திரி, நான், சரோஜாதேவி. நல்ல அமைப்பான திரைக்கதை என்பதால் மூவரும் சேர்ந்து நடித்தோம். ஆனால் டைட்டில் கார்டில் யாருடைய பெயர் முதலில் வரவேண்டும் என்கின்ற சர்ச்சை அங்குதான் ஆரம்பமானது.

இதற்கு திரையுலக ஜாம்பவான் ஏவி.எம்.செட்டியார் நூதனமான முறையில் 'உங்கள் அபிமான நட்சத்திரங்கள் நடிக்கும்' என்று டைட்டில் கார்டு போட்டார். முதலில் சிவாஜி, அடுத்து சரோஜாதேவி, மூன்றாம் இடத்தில் ஜெமினி -சாவித்திரி படம், நான்காவதாக என் படம், அடுத்து தங்கவேலு -எம்.சரோஜா, கமல் இரட்டை படம் என்று எங்கள் புகைப்படங்களைப் போட்டிருந்தனர். 'பார்த்தால் பசி தீரும்' படத்தின் டைட்டில் கார்டு தகராறு குறித்து, அப்போது சாவித்திரி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

"நான்தான் சரோஜாதேவியை விட சீனியர். ஆனால் அவர் எனக்கு அடுத்த இடத்தில் தனது பெயரை போட்டுக்கொள்ள ஏதாவது மறுப்பு சொல்லியிருப்பார் போலிருக்கிறது. என்னுடைய பெயரை தொடர்ந்து சரோஜாதேவி பெயர் அப்புறம் சௌகார் ஜானகி பெயர் இருந்திருந்தால் சரியாக இருக்கும். 'எங்க வீட்டு மகாலட்சுமி' படத்தில் கண்ணம்பா பெயரைத்தான் முதலில் காட்டினார்கள். அப்போதும் நான் முன்னணி நடிகை என்றாலும் என் பெயரை கண்ணாம்பா வுக்கு அடுத்ததாக போட ஒப்புக்கொண்டேன். 'பார்த்தால் பசி தீரும்' பட டைட்டில் பகுதியில் எல்லோருடைய படத்தையும் ஒருங்கே காட்டி மதிப்பளிக்கப்பட்டது ஆனால், அது சென்னையில் மட்டும்தான் அப்படிக் காட்டினார்களாம்.

www.nakkheeran.in

வஞ்சிக்கோட்டை வாலிபன் படத்தில் - பத்மினி, வைஜயந்திமாலா



தமிழிலும் இந்தியிலும் எடுத்தார் எஸ்.எஸ்.வாசன். இரண்டு மொழியிலும் இவர்கள்தான் கதாநாயகிகள்.

இந்தப் பிரச்சினை ஓரிரு நாள் நீடித்தது. பிறகு பத்மினியின் அம்மாவும், வைஜெயந்திமாலாவின் பாட்டியும் ஒரு முடிவுக்கு வந்தனர். தமிழில் பத்மினி பெயரை முதலில் போடுவது, அதேபோல ஹிந்தியில் வைஜெயந்திமாலா பெயர் முதலில் போட்டுக் கொள்ளலாம்'' என்று பத்மினியின் தாயார் சொல்ல, இரு தரப்பும் ஏற்றுக்கொண்டது.

வெளியூர்களில் சரோஜாதேவியின் பெயரே மேலே இருந்ததாகக் கேள்விப்பட்டேன். எந்தப் படமானாலும் நடிப்புதான் முக்கியம். பெயர் போட்டுக்கொள்வதில் நீ முந்தி, நான் முந்தி என்று சண்டை போடுவது எனக்கு பிடிக்கவில்லை. இந்த விவகாரத்தை அப்படியே விட்டுவிட்டேன்'' என்று சாவித்திரி தனது மனக்குமுறலை வெளிப்படுத்தியிருந்தார்.

என் பெயர்தான் டைட்டில் கார்டில் முதலில் வரவேண்டும் என்கின்ற சர்ச்சை 1958-ல் 'வஞ்சிக் கோட்டை வாலிபன்' படத்தில் தொடங்கிவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். வைஜயந்தி மாலாவும் பத்மினியும் போட்டி போட்டு நடனம் ஆடும்போது 'சபாஷ் சரியான போட்டி' என்று பி.எஸ்.வீரப்பா சொல்வார் அல்லவா! அப்படித்தான் அந்த படத்தில் பத்மனிக்கும் வைஜெயந்தி மாலாவுக்கும் யார் பெயர் முதலில் வரவேண்டும் என்று போட்டி தலையெடுத்தது.

'தமிழ்நாட்டில் என்னுடைய மகள் பத்மினி தான் முன்னணி நடிகை. அதனால் அவள் பெயர் தான் முதலில் வரவேண்டும்' என்று பத்மினியின் தாயாரும் 'தமிழ் சினிமாவிலும் இந்தி சினிமாவிலும் என் பேத்திதான் முன்னணி நடிகை, எனவே வைஜயந்திமாலா பெயர்தான் முதலில் வரவேண்டும்' என்று அவரது பாட்டியும் சொல்ல... இதனால் படத்தின் தயாரிப்பாளர், இயக்குனர் எஸ்.எஸ். வாசன் சாருக்கு பெரிய தலைவலியாக போய்விட்டது. இந்த போட்டா போட்டியால் படத்தின் வெளியீடு தள்ளிப் போகுமோ என்கின்ற அச்சமும் அவருக்கு. அது மட்டுமல்ல, வஞ்சிக் கோட்டை வாலிபன் படம் ஒரே நேரத்தில்

இதை எதற்கு இங்கு சொல்கிறேனென்றால், என்னுடைய வாழ்க்கையிலும் இதேபோல ஒரு டைட்டில் கார்டு பிரச்சினை வந்தது. இதே ஜெமினி நிறுவனம் தயாரித்த எம்.ஜி.ஆரின் நூறாவது படமான 'ஒளி விளக்கு' படத்தில் அந்தப் பிரச்சினை பெரிதாக வெடித்தது. இதனால் தயாரிப்பு நிறுவனத்திற்கு பெரும் சிக்கல் ஏற்பட்டது. இந்தப் படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஜோடி ஜெயலலிதா என்றாலும் மிகமிக முக்கியமான கதாபாத்திரம் என்னுடையது. பாத்திரத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் தந்து கதை பின்னப்பட்டிருந்தது. கதையின் நாயகி நான்தான். என்னை முன்னிட்டுதான் கதை நகரும். எனவே ஜெமினி நிறுவனம் எம்.ஜி.ஆர்., அடுத்து சௌகார் ஜானகி என்று என் பெயரை டைட்டில் கார்டில் போட முடிவு செய்திருந்தது. ஜெயலலிதாவும் அவருடைய அம்மாவும் பெரிய பிரச்சினை பண்ணிட்டாங்க. ''எம்.ஜி.ஆருக்கு ஜோடி ஜெயலலிதா. அவருடைய பெயர்தான் முதலில் வரவேண்டும். எம்.ஜி.ஆருக்கு அடுத்து சௌகார் ஜானகி பெயரை எப்படிப் போடலாம்...? மூன்றாவதாகத்தான் சௌகார் பெயர் இடம் பெற வேண்டும் என்று தயாரிப்பாளர் எஸ்.எஸ்.வாசன் சார்கிட்ட சண்டை போட்டார்கள்.

ஹிந்தி கதையில் ஜெயலலிதா கதாபாத்திரம் இல்லை, தமிழில் கமர்சியலுக்காகவும் எம்.ஜி.ஆருக்கு ஒரு ஜோடியாகவும் ஜெயலலிதா கதாபாத்திரம் உருவாக்கப்பட்டது.

**அ**ப்புறம் நடந்தது என்ன?

**(பேசுறேன்...)**

படங்கள் உதவி: ஞானம்



டயா பூஸ்டர் ™
சர்க்கரை நோயாளிகளின் அக்கரையான உணவு
கேப்சூல் வடிவில்
Dia BOOSTER
a Food Supplement
IMPROVES ENERGY, STRENGTH, STAMINA
MONEY BACK 100% GUARANTEED
டயா பூஸ்டர் ஒரு சர்க்கரை நோய்கான உத்தரவாதம்
சர்க்கரை நோய்க்கு
Bye Bye சொல்லுங்கள்,
டயா பூஸ்டருடன்.
72 மணி நேரத்தில் இரத்தத்தில் உள்ள
சர்க்கரையின் அளவை கட்டுக்குள்
கொண்டு வருகிறது..
மேலும் தொடர்புக்கு
78 23 99 7001 | 78 23 99 7004
ஜிங்கா கோல்டு
Jinga Gold
IT ONLY TAKES ONE
4 CAPSULES
4 கேப்சூல்ஸ்
ரூ.600/
மட்டுமே
GMP
ISO
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY VISHWAM
MedPlus
ஒன்னு போதும்
நின்னு பேசும்!
அப்பலோ, மெட்ப்ளஸ்
உட்பட அனைத்து மருந்து
கடைகளிலும் கிடைக்கும்
Super stockist Sruti's
ஜிங்கா கோல்டு
ஹெல்ப் லைன்
9962 66 4444
மாவட்ட வாரியான உதவிக்கு
9003640742
For Personal Delivery
9962 8080 90


Advt

புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்பட நகரைச் சுற்றி பல இடங்களில் அடிக்கடி பைக் திருட்டுகள் அதிகமாக நடந்தது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்தவர்களைப் பார்க்க வரும் உறவினர்களின் பல பைக்குகள் காணாமல்போக, ஏராளமான பைக் திருட்டுப் புகார்கள் குவிந்தன. கணேஷ் நகர் காவல் நிலையத்தில் மட்டும் அடுத்தடுத்து 4 புகார்கள் பதிவானது.

இந்நிலையில் புதுக்கோட்டை நகரைச் சுற்றி தொடர்ந்து பைக்குகள் திருடப்படுவதைக் கண்டறிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா உத்தரவின் பேரில் புதுக் கோட்டை டி.எஸ்.பி. பிருந்தா மேற்பார்வையில் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மாரிமுத்து, சேதுராமன், காவலர்கள் மணிகண்டன், ரகுநாதன் உள்ளிட்ட போலீசார் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டது. தனிப்படை போலீசார், ஆங்காங்கே திருட்டு நடந்த பல்வேறு இடங்களிலுள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வுசெய்து, அதில் காணாமல் போன பைக்குகளில் செல்லும் நபர்களை அடையாளம் கண்டதோடு, அவர்கள் ஏற்கனவே வழிப்பறி வழக்குகளில் கைதானவர்கள் என்பதைக் கண்டறிந்தனர்.

அடையாளம் காணப்பட்ட புதுக் கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகிலுள்ள முள்ளூர் ராசாப்பட்டி சுப்பிரமணி மகன் சுள்ளான் (எ) விக்ரம், புத்தாம்பூர் குறிச்சிப்பட்டி பழனிச்சாமி மகன் முத்துமணிப் பாண்டி (20) ஆகிய இருவரை கைதுசெய்து விசாரணை செய்தபோது இவர்களுடன் சேர்ந்து பைக் திருட்டில் ஈடுபட்ட ஏற்கனவே மற்றொரு வழக்கில் கைதாகியுள்ள ராசாப்பட்டி மேலத்தெரு முத்துக்குமார் மகன் தயாநிதி (20) ஆகிய 3 பேர் மீதும் கணேஷ் நகர் காவல் உதவி ஆய்வாளர் சங்கீதா வழக்குப் பதிவுசெய்து அவர்களிடமிருந்து 15 திருட்டு பைக்குகளை மீட்டுள்ளார்.

தொடர்ந்து நடந்த விசாரணையில், ஏற்கனவே மருத்துவக்கல்லூரியைச் சுற்றியுள்ள பகுதிகளில் தனியாகச் செல்லும் நபர்களைத் தாக்கி பணம், பைக்குகளை பறித்துச்சென்றது, துணைக்கோல் நகரப் பகுதியில் ஒதுங்கும் நபர்களை தாக்கி பணம்பறித்தது போன்ற குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டிருப்பதும் தெரியவந்தது. "நாங்க எல்லாரும் சின்ன வயசிலேயே போதை ஊசி, மாத்திரைக்கு அடிமையாகிட்டோம். அதை விட்டுட்டு இருக்கமுடியாது. எப்படியாவது ஊசி போட்டுக்கணும். இல்லன்னா கிறுக்குப்புடிச்ச மாதிரி ஆகிடும். புதுக்கோட்டை நகரில் நாங்க எல்லாரும் ஒரு இடத்தில்தான் போதைக்காக ஊசி, மாத்திரை வாங்குவோம். அதில் எங்களுக்குள்ள பழக்கம் ஏற்பட்டது. ஒருகட்டத்தில் ஊசி வாங்க பணமில்லை என்றபோது மெடிக்கல் காலேஜ் பகுதியில் தனியா வரும் நபர்களை தாக்கி பணம்பறிச்சு ஊசி வாங்குவோம்.

அதேபோல, மெடிக்கல் காலேஜ்ல பேஷண்டுகளைப் பார்க்கவரும் உறவினர்கள் எந்த பாதுகாப்புமில்லாத இடத்தில்தான் பைக்குகளை

# பைக் திருடி வித்து... போதை ஊசி!

## –திருடர்கள் பகீர் வாக்குமூலம்!



பிடிபட்ட பைக்குகள்

எந்தவொரு செயலையும் கண்டு நீங்கள் வேதனைப்பட்டால்...
நீங்கள் இன்னும் பக்குவப்படவில்லை என்று பொருள்!

## கருவைக் காட்டுக்குள் போதை ஊசி!

புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தனது உறவினரை சிகிச்சைக்காக அழைத்துச்சென்று சில நாட்கள் தங்கியிருந்தபோது பார்த்ததை நம்மிடம் ஒருவர் பகிர்ந்துகொண்டார். “மெடிக்கல் காலேஜுக்கு வடக்குப் பக்கமுள்ள சீமைக் கருவேலங்காட்டுப் பக்கம் ஒதுங்கப் போனப்ப, 15, 20 வயசுப் பசங்க நிறைய பேர் பைக்குகளில் வந்தார்கள். அங்கே ஒருத்தன் கருப்பு பேக் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். வந்த சிறுவர்கள் அவனிடம் போய் ரூ.50, 100 பணம் கொடுக்க, அந்தப் பணத்தை வாங்கி பேக்ல போட்டுட்டு, பேக்ல இருந்து ஒரு ஊசிமருந்து எடுத்து பசங்களுக்கு கை நரம்புல போடுறான். 10 நிமிடம் அங்கே இருந்தேன். அதுக்குள்ள 15 பசங்க வந்து ஊசி போட்டுட்டுப் போனாங்க. ஒரே ஊசியை பயன்படுத்திதான் எல்லாருக்கும் ஊசி போடுறாங்க” என்றார் வருத்தமாக.

**-செம்பருத்தி**

நிறுத்துவர். அந்தப் பக்கம் போய் கொஞ்சநேரம் நின்னு நோட்டம்விட்டு சைடு லாக் உடைத்து பைக்கை எடுத்துட்டுப் போய் மெடிக்கல் காலேஜ் பக்கத்திலுள்ள காட்டுப்பகுதியில் வைத்து நம்பர் பிளேட்களை கழற்றிப் போட்டுவிட்டு சேஸ், எஞ்சின் நம்பர்களை அழித்துவிட்டு புதுக்கோட்டை டவுனில் ஒருத்தரிடம் ரூ.3000 முதல் 5000 ரூபாய் வரை வித்துடுவோம். அந்தப் பணத்தில் பிரியாணி சாப்பிட்டு போதை ஊசி, மாத்திரைகளை வாங்கி வந்துடுவோம். அந்த போதையிலேயே திருடப்போவோம். போதை தெளிஞ்சதும் தூக்கம்வராது. அதுக்கு சில மாத்திரைகளை வாங்கிப்போடுவோம்” என்று கூறி போலீசாரை கிறுகிறுக்க வைத்துள்ளனர்.

இதையடுத்து போலீசார் அந்த போதை ஊசிக் கும்பலை பிடிக்க முயன்றுவருகின்றனர். “ஏற்கனவே திருக்கோகர்ணம் காவல் நிலையத்தில் பலமுறை அந்த நபர்களை பிடித்திருக்கிறோம். ஆனால் இன்னும் அவர்கள் அடங்கவில்லை. விரைவில் அந்தக் கும்பலை பிடித்துவிடுவோம்” என்ற போலீசார், “போதைக்கென்று தனி மாத்திரை, மருந்துகள் இல்லை. வலிக்கும், பெண்கள் பிரசவத்தின்போது பயன்படுத்தும் சில மாத்திரை, ஊசிகளைத்தான் இவர்கள் போதை ஊசி என்கிறார்கள். 10 ரூபாய் மதிப்புள்ள மாத்திரை மருந்துகளை ஆயிரக்கணக்கில் விற்கிறார்கள். பள்ளியில் படிக்கும்போதே இதுபோன்ற மாணவர்களை இந்த போதை ஊசி விற்பனை கும்பல் வசப்படுத்திவிடுகிறது. பெற்றோர் தங்கள் குழந்தைகளின் நடத்தைகளில் மாற்றம் தெரிந்தால் கண்காணித்து உடனுக்குடன் திருத்தவேண்டும், நீண்டநாள் பழக்கத்திலுள்ளவர்கள் என்றால் உரிய மருத்துவர்களிடம் அழைத்துச்சென்று சிகிச்சை கொடுக்க வேண்டும்” என்கின்றனர்.

**-இரா.பகத்சிங்**

முத்துமணிப் பாண்டி



சுள்ளான்



தயாநிதி





# அரசுத் திட்டங்களை முடக்கும் அலுவலர்கள்!

## –முதல்வர் சாட்டையை சுழற்றுவாரா?

மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக, ‘பொன்மகள் வைப்பு திட்டம்’, ‘மகளிர் உரிமைத்தொகை திட்டம்’, ‘முதல்வர் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்’, ‘கலப்புத் திருமண உதவித்தொகை திட்டம்’, ‘உழவர் பாதுகாப்பு திட்டம்’ உட்பட எண்ணற்ற திட்டங்களை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்துள்ளார். இத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க ’உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட முகாம்களை நடத்தி, 30 நாட்களில் தீர்வு காண வேண்டுமென்று அறிவுறுத்தியிருந்தார். குறிப்பாக, பட்டா மாற்ற விவகாரங்களை 30 நாட்களுக்குள் முடிக்க வேண்டுமென்பதற்காக, இதுதொடர்பான அலுவலர்களை கண்காணிக்க சென்னையில் தரக்கட்டுப்பாட்டு மையத்தையும் தொடங்கினார். முதல்வரின் இந்த முன்னெடுப்பு எந்த அளவுக்கு பலனளித்துள்ளது என்பதை அறிந்துகொள்வதற்காக பொதுமக்களை சந்தித்தோம்.

ஆதம்பாக்கம், கிருஷ்ணாபுரம் பகுதியில் வசித்துவரும் 80 வயது சரோஜா என்ற மூதாட்டிக்கு, கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், தொளார் தெற்கு வருவாய் கிராமத்தில் பூர்வீக நிலம் உள்ளது. கூட்டுப்பட்டாவிலுள்ள இந்த நிலத்தை உட்பிரிவு செய்து, தனக்கும், தனது மகன்களுக்கும் பட்டா மாற்றம் செய்ய 4.4.2025-ல், இணைய வழியாக ஆவணங்களை பதிவேற்றம் செய்து, கட்டணமாக 1,500 ரூபாய் செலுத்தியிருக்கிறார். ஆனால், திட்டக்குடி நில அளவையர் சுந்தரமூர்த்தி கண்டுகொள்ளவே யில்லை. பலமுறை நேரில் சென்று சொல்லியும் செய்துதர மறுத்துள்ளார். பின்னர், தொளார் கிராமத்தில் 17.9.2025 அன்று நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் மனு அளித்திருக்கிறார். அப்போது, கிராம நிர்வாக அலுவலர் கிருஷ்ண குமார் விரைவில் பட்டா மாற்றம் செய்து தருவதாகக் கூறியிருக்கிறார். ஆனால் தற்போதுவரை செய்துதரவில்லை. அலைந்து அலைந்து ஓய்ந்துபோன மூதாட்டி சரோஜா தற்போது மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கிறார்.

கொடிக்களம் கிராமத்தைச் சேர்ந்த தருண்குமார், தனது அத்தைகள் உமாராணி, கலைச்செல்வி ஆகியோரிடமிருந்து 10 சென்ட் நிலத்தை பத்திரப்பதிவு மூலம் கிரையம் பெற்றுள்ளார். ஆனால் பட்டா மாற்றம் செய்யவில்லை. இதுதொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் கல்பனாவிடம் விண்ணப்பித்திருக்கிறார். ஆனால் அவரோ, விற்பனை செய்த உமாராணி, கலைச்செல்வி, விலைக்கு வாங்கிய தருண்குமார் ஆகிய மூன்று பேர் பெயர்களிலும் கூட்டுப்பட்டாவாக மாற்றம் செய்துள்ளார். லஞ்சம் கொடுக்காததால் இப்படி குழப்படி வேலையை செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், 30 9. 2025 அன்று இறையூரில் நடந்த ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் மனு கொடுத்து 4 மாதங்களாகியும் தனது பெயருக்கு முழுமையாக



அமைச்சர் சி.வி.கணேசன்

பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்கிறார் தருண்குமார்.

இதுகுறித்து திட்டக்குடி வட்டாட்சியர் உதயகுமாரை நேரில் சந்தித்து கேட்டோம். ஆவணங்களை வாங்கிப் பார்த்தவர், “காலம் கடந்து விட்டது, மீண்டும் பட்டா மாற்றம் செய்ய இணைய வழியில் பணம் செலுத்தச் சொல்லுங்கள்” என்று கூறினார். “ஏற்கெனவே பணம் செலுத்தியதற்கு நில அளவையாளர் எந்த வேலையும் செய்யவில்லை. மீண்டும் பணம் செலுத்தச் சொல்கிறீர்களே? நில அளவையாளரை கண்டிக்காமல் ஒருதலைப்பட்சமாக பேசலாமா?” என்று கேட்டபோது, ‘‘இப்படியெல்லாம் எதிர்த்துப் பேசக்கூடாது. போய் வேலையை பாருங்கள்’’ என்று நம்மை துரத்தாத குறையாக வெளியே அனுப்பினார்.

திட்டக்குடி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து மாற்றுத்திறனாளிகள், முதியோர் உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை பெறுவோர்களின் தொலைபேசி எண்களில் அவ்வப்போது தொடர்புகொண்டு, “நாங்கள் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பேசுகிறோம் .நீங்கள் உதவித்தொகை பெறுவது குறித்து உங்களிடம் விசாரிக்க வேண்டும்” என்று மிரட்டி பணம் பறிக்கிறார்கள். பின்னேரி சத்தியகலா, மேலநிம்மேலி சங்கர் ஆகியோர் இதுபோல் போன் செய்து மிரட்டியுள்ளனர். அவர்களின் தொடர்பு எண்களை வட்டாட்சியர் உதயகுமாரிடம் கொடுத்து, பயனாளிகளிடம் மிரட்டி பணம் பறிப்பதாக புகாரளித்தபோது, “பார்க்கிறேன், விசாரிக்கிறேன்” என்று அலட்சியமாக பதிலளித்தார். இதுகுறித்து அலுவலக ஊழியர்கள் சிலரிடம் கேட்டபோது, அலுவலகத்தில் வேலை செய்யும் யாரோ சிலர், புரோக்கர்களிடம் பயனாளிகளின் எண்களைக் கொடுத்து இதுபோல் பணம் பறிப்பதாகக் கூறினார்கள். புரோக்கர்களின் பிடியில் திட்டக்குடி வட்டாட்சியர் அலுவலகம் சிக்கித் தவிக்கிறது

விழுப்புரம் மாவட்டம், அனந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த அய்யனார், தனது முன்னோர்கள் சொத்தை தனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்து தரக்கோரி உரிய ஆவணங்களுடன் விக்கிரவாண்டி வட்டாட்சியரிடம் விண்ணப்பித்து ஆண்டுக்கணக்காகியும் அவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யவில்லை. இதுகுறித்து அவர், “பட்டாவில் இறந்தவர்கள் பெயர்களை நீக்கிவிட்டு, வாரிசுகளுக்கு ஆவணங்கள் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்து தருமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.







உங்களுடன் ஸ்டாலின் முகாம்



சரோஜா



அய்யனார்

அனைத்திலும் ஆரம்பம் கடினமாகத்தான் இருக்கும்;
விட்டுவிடாதே, கற்றுக்கொள்ளலாம்!

**எண்ணத்தை தூய்மையாக்குங்கள், வாழ்க்கையை அழகாக்குங்கள் -உங்களுடைய எண்ணம் எந்த அளவுக்கு உயர்ந்ததாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும்!**

அரசு எத்தனை உத்தரவுகளை போட்டாலும் அரசு அதிகாரிகள் அதை மதிப்பதில்லை. இப்படியான அதிகாரிகள்மீது கிரிமினல் வழக்கு பதிவுசெய்ய வேண்டும். அப்போதாவது இவர்கள் திருந்துகிறார்களா என்று பார்ப்போம்” என்கிறார் கோபத்தோடு.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் திருப்பதி, சுமார் 30 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். அவருக்கு முறைப்படி வருவாய் துறையினர் பட்டா மாற்றம் செய்து தரவில்லை. இதுகுறித்து திருப்பதி நம்மிடம், “அரசு அதிகாரிகள், மக்கள் கொடுக்கும் மனுக்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்வதில்லை. இந்த லட்சணத்தில் அரசு அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு முன்வந்துள்ளது. அதே நேரத்தில், மக்களின் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காத அலுவலர்கள், அதிகாரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்வதோடு, இப்படிப் பட்டவர்களுக்கு ஓய்வூதியம் கிடையாது என்று அறிவிக்க வேண்டும். அப்படியாவது இவர்கள் மக்கள் பிரச்சனைகளை தீர்ப்பார்களா என்று பார்க்க வேண்டும். இதற்காக அரசு சட்டத்திருத்தத்தையே கொண்டு வரலாம்” என்கிறார்.


திருப்பதி


தருண்குமார்


உதயகுமார்

வருவாய்த் துறையில் சீர்கேடுகள் மிக அதிகம் என்பதற்கான ஒரு புள்ளி விபரத்தை லஞ்ச ஒழிப்புத்துறை வெளியிட்டுள்ளது. அதில், கடந்த 2021ஆம் ஆண்டு முதல் 2025 மார்ச் மாதம் வரை 29 தாசில்தார்கள் முதல் கிராமப் பணியாளர்கள் வரை வருவாய்த்துறையில் 92 பேர் லஞ்ச ஒழிப்புத் துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் லஞ்சம் பெறுவதில் வருவாய்த்துறை முதலிடத்திலும், மின்சார வாரியம் இரண்டாவது இடத்திலும், உள்ளாட்சித் துறை மூன்றாவது இடத்திலும் கொடிகட்டிப் பறக்கிறது என்கிறது லஞ்ச ஒழிப்புத்துறை. திருப்பத்தூர் சமூல நல தாசில்தார் வள்ளியம்மாள், சீர்காழி மண்டல துணை வட்டாட்சியர் தேவகி, விழுப்புரம் மாவட்டம் ஆலங்குப்பம் கிராம நிர்வாக அலுவலர் சரவணன், வடமதுரை உதவி வேளாண்மை அலுவலர் சந்திரலேகா, சேலம் மாவட்டம் பெரியேரி கிராம நிர்வாக அலுவலர் ராஜசேகர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பி.டி.ஓ. கார்த்திக்குமார், மருதண்டபள்ளி பஞ்சாயத்து செயலர் ராஜேந்திரன், திண்டுக்கல் மாவட்டம் வி.கல்லுப்பட்டியைச் சேர்ந்த சமூக நல விரிவாக்க அலுவலர் உமாராணி ஆகியோர் அவர்கள் துறையில் சிறந்த சேவை செய்ததற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல, பொதுமக்களிடம் லஞ்சம் பெறும்போது லஞ்ச ஒழிப்புத் துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளவர்கள். இந்த பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

அரசுத் துறைகளில் நேரடியாக மனு கொடுத்தால் அதிகாரிகளும், அலுவலர்களும் பொதுமக்களிடம் லஞ்சம் கேட்கிறார்கள் என்பதற்காகவே இணைய வழியில் விண்ணப்பிக்க வழிகாட்டி உள்ளது. அரசு அலுவலர்களோ, எந்த வழியில் விண்ணப்பித்தாலும் காசு இல்லாமல் கதையாகாது என்று பிடிவாதமாக இருக்கிறார்கள். 90 சதவிகித அதிகாரிகள் மக்கள் பணியை செய்வதேயில்லை. இதனால் ஏற்படும் வெறுப்பு, அரசின் மீதுதான் பிரதிபலிக்கும். எனவே ஆளுங்கட்சிக்கு தான் இந்த அதிகாரிகளால், அலுவலர்களால் பாதிப்பு. எனவே, இப்படியான அலுவலர்களால் நிறைவேற்றப்படாத மக்கள் கோரிக்கைகளை அந்தந்த தொகுதி எம்.எல்.ஏ.க்களும், அமைச்சர்களும் ஆய்வுசெய்து தீர்வுகாண முயற்சிப்பது நல்லது.

இந்த ஆலோசனையை திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினரும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் பயன்பாட்டு துறை அமைச்சருமான சி.வி.கணேசனின் கவனத்திற்கு கொண்டுசென்றோம். அவர் நம்மிடம் ‘‘தங்கள் ஆலோசனை மிகச்சரியானது. நான் உடனடியாக தொகுதி மக்களின் நிறைவேற்றப்படாத கோரிக்கை மனுக்கள் குறித்து பொதுஅறிவிப்பின் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்தி அவர்களை வரவழைத்து வட்டாட்சியர் அலுவலகத்தின் வெளியிலேயே அமர்ந்து, தீர்க்கப்படாத மனுக்கள் மீது அதே இடத்தில் தீர்வு காண வழிவகை செய்கிறேன். சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்“ என்று உறுதியளித்தார்!

அரசாங்கத்தின் மக்கள் நலத் திட்டங்களை சரியாக செயல்படுத்தாத அரசு அலுவலர்கள் மீது சாட்டையை சுழற்றுவாரா முதல்வர்?

**-எஸ்.பி.எஸ்.**

# கிறிஸ்துவர் வாக்குகள்! தி.மு.க. அதிரடி வியூகம்!

தேர்தல் களத்தில் எதிரிகளை வீழ்த்த பல்வேறு வியூகங்களை வகுத்து செயலாற்றி வருகிறது தி.மு.க! அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணிக்கு சாதகமானதை உடைக்க ஒரு வியூகமும், விஜய் நம்பும் வாக்குகளை வீழ்த்த ஒரு வியூகமும் என தனது அரசியல் யுக்திகளை வேகமாக வகுத்து வருகிறார் முதல்வர் ஸ்டாலின்.

இதுகுறித்து தி.மு.க.வின் மூத்த மா.செ.க்களிடம் பேசும்போது, "இளைஞர்களின் ஆதரவையும் கிறிஸ்துவ சமூகத்தினரின் வாக்குகளையும்தான் மிகவும் நம்புகிறார் நடிகர் விஜய். இளைஞர்களை பொறுத்தவரை விஜய் குறிவைப்பது கல்லூரி மாணவ, மாணவியர்களை. ஆனால், இவர்களில் பெரும்பான்மையினரை தங்கள் கட்சியின் உறுப்பினர்களாக சேர்த்துள்ளது தி.மு.க.



கிறிஸ்துவ விழாவில்...

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தின் சுமார் 30 லட்சம் கல்லூரி மாணவ, மாணவியருக்கு இலவச லேப்டாப் வழங்கிய முதல்வர், 'நான் முதல்வன்' திட்டம் வாயிலாக அவர்களுக்கு மாதா மாதம் கல்வி உதவித்தொகையும் வழங்கிவருகிறார். இதெல்லாம் கல்லூரி மாணவ -மாணவியர், முதல் தலைமுறை வாக்காளர்கள், கல்லூரி முடித்து பணிக்குச் செல்லும் இளம் தலைமுறையினர்களிடம் தி.மு.க. மீதும், முதல்வர் ஸ்டாலின் மீதும் மிகப்பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

விஜய்யின் அடுத்த நம்பிக்கை கிறிஸ்துவ வாக்கு வங்கி. இதற்கு தி.மு.க.வில் உள்ள கிறிஸ்துவ நிர்வாகிகள் மூலமாகவே செக் வைத்துவருகிறார் ஸ்டாலின். இதற்காக, தமிழகம் முழுவதும் தி.மு.க.வினர் முடுக்கிவிடப்பட்டுள்ளனர், முதல்கட்டமாக, நீலகிரி மாவட்டத்திலிருந்து வேகமெடுத்துள்ளது இந்தப் பணி. ஊட்டி நகரச் செயலாளரும், அம்மாவட்ட திட்டக்குழு உறுப்பினருமான ஜார்ஜ் சமீபத்தில், கிறிஸ்துவ மதபோதகர் மோகன் சி லாசரஸ் தலைமையில் 'அற்புத பெருவிழா' ஒன்றை ஊட்டியில் நடத்தினார். இரு நாட்கள் நடந்த இந்த நிகழ்வில், சுமார் ஒரு லட்சம் கிறிஸ்துவர்கள் கலந்துகொண்டு தி.மு.க.வை உயர்த்திப்பிடித்தனர். இந்த சம்பவம், முதல்வரின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

இந்த அற்புத பெருவிழா கிறிஸ்துவ ஒன்றுகூடல் கூட்டங்களை தமிழகம் முழுவதும் நடத்த ஜார்ஜுக்கு அசைன்மெண்ட் கொடுக்கப்பட்டிருப்பதால், மாவட்ட வாரியாக அதனை நடத்தி வருகிறார். இத்தகைய கிறிஸ்துவ விழாக்களில் மைனாரிட்டி மக்களின் நண்பனாக ஸ்டாலின் அரசு செய்துவரும் நன்மைகள் பட்டியலிடப்படுகிறது. இப்படி, விஜய்யின் வாக்கு வங்கிக்கு வேட்டு வைத்துவருகிறார் முதல்வர் ஸ்டாலின்" என்று விவரிக்கின்றனர். இதுகுறித்து ஜார்ஜிடம் கேட்டபோது, "சிறுபான்மை மக்களின் நண்பன் எப்போதும் தி.மு.க.தான். குறிப்பாக, கிறிஸ்துவ மக்களின் செல்லப்பிள்ளைதான் தலைவர் ஸ்டாலின்" என்கிறார்.



ஜார்ஜ்

சி.பி.ஐ. விசாரணை, ஜனநாயகன் ரிலீஸ் சிக்கல் என நொந்துபோயிருக்கும் விஜய்யின் கிறிஸ்துவ வாக்கு வங்கியில் ஓட்டையை போட்டுக் கொண்டிருக்கிறது தி.மு.க.

**-இளையர்**

JAIL FOLLOW UP 62

# தமிழகச் சிறைகளில் ரூ.500 கோடி ஊழல்!

தமிழக சிறைகளின் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து விசாரிக்க வேண்டி, சென்னை உயர் நீதிமன்றத்தால் அமிகஸ் கியூரியாக நியமிக்கப்பட்ட மூத்த வழக்கறிஞர் வைகை, சிறை விதி-1983, தொகுதி-II, பகுதி-26, விதி எண் 505 முதல் 519 வரை (தற்போது சிறை விதி, 2024 - பகுதி 26, விதி எண் 502 முதல் 517 வரை) தெளிவாகக் கூறியுள்ள அதிகாரப்பூர்வ மற்றும் அலுவல் சாரா பார்வையாளர்கள் கொண்ட பார்வையாளர் குழுவை அமைப்பது எவ்வளவு அவசியம் என்பதை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இந்தப் பார்வையாளர் குழுவின் உறுப்பினர்கள், சிறையில் உள்ள எந்தவொரு கைதியுடனும், அவர்கள் விரும்பினால், ரகசியமாகவும் தனித்தனியாகவும் உரையாடும் அதிகாரம் பெற்றவர்கள் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

ஆனால் இங்கே ஒரு அடிப்படை கேள்வி எழுகிறது. Official and Non-Official Visitors என்பவர்கள் யார்? இவர்களின் முக்கியத்துவம் என்ன? சிறை நிர்வாகத்தில் இவர்களால் என்ன செய்ய முடியும்? இதன் வரலாற்றுப் பின்னணி என்ன? இந்தக் கேள்விகளுக்கான பதில்களை அறியாமல், சிறை சீர்திருத்தம் குறித்து பேசுவது வெறும் வார்த்தை அலங்காரமாகவே மாறிவிடும்.

சிறை விதி 503/2024-ன் படி, மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், மாவட்ட நீதிபதி, தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் கோட்டாட்சியர், மாநகர காவல் ஆணையர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மருத்துவ மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் இயக்குநர் அல்லது மருத்துவக் கல்வி இயக்குநர் அல்லது பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் இயக்குநர், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி டீன், சுகாதார சேவைகள் இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர், தமிழ்நாடு காவல் வீட்டுவசதிக் கழகத்தின் நிர்வாகப் பொறியாளர், மாவட்ட அளவிலான காவல் வீட்டுவசதிக் கழக நிர்வாகப் பொறியாளர், மாவட்டக் கல்வி அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேளாண் அலுவலர், மாவட்ட தொழில்துறை அலுவலர், கால்நடை பராமரிப்பு இயக்குநர், மாவட்ட கால்நடை மருத்துவர், நகராட்சி மற்றும் மாநகராட்சி சுகாதார அதிகாரிகள், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர், கோட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் அலுவலர் ஆகியோர் அதிகாரப்பூர்வ பார்வையாளர்களாக இருப்பார்கள்.

இந்தப் பட்டியல் ஒன்றை மட்டும் பார்த்தாலே, சிறை என்பது காவல் துறையின் தனிப்பட்ட கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரு மூடப்பட்ட வளாகம் அல்ல என்பதும், அது நிர்வாகம், நீதித்துறை, சுகாதாரம், கல்வி, சமூக நலன், மனிதாபிமானம் ஆகிய அனைத்தும் ஒன்றாக இணையும் ஒரு பொது நிறுவனம் என்பதும் சட்டத்தின் நிலைப்பாடாக வெளிப்படுகிறது.

சிறை விதி 504/2024-ன்படி, ஒவ்வொரு மத்திய சிறைக்கும் ஆறு அலுவல் சாரா பார்வையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவர்களில் குறைந்தது இருவர் பெண்களாக இருக்க வேண்டும். பெண்களுக்கான சிறப்புச் சிறைகளுக்கு மூன்று பெண்கள் அலுவல் சாரா பார்வையாளர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டச் சிறை, சிறப்பு கிளைச் சிறை, திறந்தவெளிச் சிறை மற்றும் கிளைச் சிறைகளுக்கு இரண்டு அலுவல் சாரா உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.




www.nakkheeran.in



இவர்களை தமிழக அரசு நியமிக்கும்.

இந்த அலுவல் சாரா பார்வையாளர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள். தொடர்ச்சியாக மூன்று பதவிக்காலங்களுக்கு மேல் அல்லாத வகையில் மீண்டும் நியமிக்கலாம். நியமிக்கப்பட்ட பின்னர் இவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்பு கள் குறித்து கட்டாயமாகப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்குமான அலுவல் சாரா பார்வையாளர்களின் பட்டியலை சிறைக் கண்காணிப்பாளர்கள் பராமரிக்க வேண்டும். இவை அனைத்தும் சட்டத்தில் எழுதப்பட்ட விதிகளாக மட்டுமே இருந்துவிடக் கூடாது; நடைமுறையில் உயிர்ப்புடன் செயல்பட வேண்டிய பொறுப்புகள் ஆகும்.

சிறைச் சட்டம் 1894-ல்தான் சிறை வருகை முதன்முறையாக சட்டபூர்வ அங்கீகாரம் பெற்றது. பிரிவு 12-ன் படி, சிறை நிர்வாகம் குறித்து பார்வை யாளர்கள் தங்கள் பரிந்துரைகளைப் பதிவுசெய்யும் Visitors Book-ஐ சிறைக் கண்காணிப்பாளர் பரா மரிக்க வேண்டும். பிரிவு 59(25)-ன் கீழ், Visitors தொடர்பான விதிகளை உருவாக்க மாநில அரசு களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இதன் அடிப் படையில்தான் இந்திய மாகாணங்களில் Official Utßm Non-Official Visitors நியமிக்கப்பட்டனர்.

18.04.1919 அன்று Government of India, Home Department (Jails) Resolution No.63-ன்படி, சர் அலெக்சாண்டர் ஜி. கார்டியூ தலைமையில் எட்டு உறுப்பினர்களைக் கொண்ட இந்தியச் சிறைக் கமிட்டி (1919-1920) நியமிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் பகுதி 18, பாரா 511 முதல் 523 வரை, Visitors அமைப்பு இந்தியச் சிறை நிர்வாகத்தின் மிகவும் மதிப்புமிக்க பகுதிகளில் ஒன்றாக இருப்பதாகவும், சுதந்திரமான, பாரபட்சமற்ற பார்வையாளர்களின் வருகைகள் சிறைச் சட்டங் களும் விதிகளும் முறையாகக் கடைப்பிடிக்கப் படுவதை அரசுக்கும் பொதுமக்களுக்கும் உறுதி செய்யும் என்றும், துஷ்பிரயோகங்கள் ஏற்பட்டால் அவை விரைவில் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படும் என்றும் தெளிவாகக் கூறியது.

மேலும், பொதுமக்களிலிருந்து அலுவல் சாரா பார்வையாளர்களை நியமிப்பதன் மூலம் சிறைப் பிரச்சினைகளை சமூகமே நேரடியாக அறிந்துகொள்ளும் பயிற்சித் தளமாக செயல்படும் என்றும் அந்த அறிக்கை வலியுறுத்தியது.

**மாதிரி சிறைக் கையேடு 1970: பார்வை யாளர் அமைப்புக்கான தேசிய வழிகாட்டல்:** இந்திய முழுவதும் ஒரே மாதிரியான சிறை விதிகளை உருவாக்க மாநில அரசுகளுக்கு

www.nakkheeran.in

நெப்போலியனின் மாபெரும் வெற்றிகளுக்கு காரணம்,
ஒவ்வொரு கணமும் தன்னை நம்பியதே!

ஏற்றுக்கொள்ள முடியாத விஷயங்களை மாற்றிக்கொள்ளுங்கள்;
மாற்றவே முடியாத விஷயங்களை விட்டுத் தள்ளுங்கள்!

Vol.38
Issue No:82
நக்கீரன்

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக,
நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ்,
105, ஜானி ஜான்கான்
சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல்
அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:

**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் :
nakkheeran2003@gmail.com
இணையம்: www.nakkheeran.in

**முதன்மை பொறுப்பாசிரியர்:** மாவலி
**முதன்மை துணை ஆசிரியர்கள்:**
ஆரூர் தமிழ்நாடன், ராம்கி
**முதன்மை சிறப்பு நிருபர்கள்:**
இரா.இளையசெல்வன்,
தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :** க.சுப்பிரமணியன், சிவலிங்கம்,
கவுதமன், எம்.செந்தில்குமார், தா.மகாராஜன்,
சி.பிரான்சிஸ், பி.என்.ஆனந்த்
**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்
**முதன்மை நிருபர்கள் :**
ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** எஸ்.பி.எஸ்., ராஜா, பகத்சிங்,
செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்,
அருண்பாண்டியன்
**நிருபர்கள்:** மணிகண்டன், இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:**
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:** ச.ராஜேந்திரன்
**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:**
எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:**
ப.ராம்குமார்
**பிழை திருத்துவோர் :** து.கண்ணன், பார்த்திபன்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** பிரின்ஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**முதன்மை காசாளர் :** நித்தியானந்தன்
**தயாரிப்பு மேலாளர்கள் :**
பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன்,
சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :**
சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :**
ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம்,
யூனுஸ், பாண்டியன்

Legal Manager : **பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**

சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.

வழிகாட்ட, மத்திய அரசு வெளியிட்ட Model Prison Manual, 1970-ன் VI-வது அத்தியாயம், மாவட்ட நீதிபதி தலைவராகவும், அமர்வு நீதிபதி, சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், வெளி மருத்துவ அதிகாரி, நிர்வாகப் பொறியாளர், மாவட்ட கல்வி அதிகாரி, மாவட்ட வேளாண் அதிகாரி, பொது சுகாதார அதிகாரி மற்றும் இரண்டு பெண் உறுப்பினர்கள் Official Visitors ஆக இருக்கவேண்டும் என்றும் கூறுகிறது.

**திஹார் சிறை -மனித உரிமை வரலாற்றின் திருப்புமுனை:** 1977-ல் திஹார் மத்திய சிறையில் மரண தண்டனைக் கைதியாக இருந்த சுனில் பத்ரா, அவருடன் மரண தண்டனைக் கொட்டடியில் இருந்த பிரேம்சந்திடம் சிறைத் தலைமைக் காவலர் மாகர்சிங் பணம் கேட்டு, அதை வழங்க மறுத்ததற்காக அடித்துச் சித்ரவதை செய்து, ஆசனவாயில் இரும்புக் கம்பி செலுத்திய கொடூரம், இந்திய சிறை வரலாற்றையே உலுக்கியது. இரத்தம் தொடர்ந்து வெளியேறி, உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த பிரேம்சந்துக்காக, சுனில் பத்ரா அப்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு எழுதிய கடிதத்தை உச்ச நீதிமன்றமே Habeas Corpus மனுவாக மாற்றியது.

வழக்கறிஞர்கள் Y.S.சாஹல் மற்றும் முகுல்முட்கல் அமிகஸ் கியூரிகளாக நியமிக்கப்பட்டு சிறைக்குச் சென்று விசாரணை நடத்தினர். அவர்கள் தாக்கல் செய்த அறிக்கை, பணம் கொடுக்காததே சித்திரவதையின் காரணம் என்றும், ஏற்பட்ட காயம் கீழே விழுந்ததால், சுயமாக செய்துகொண்டதால் அல்லது மூலநோயால் ஏற்பட்டதாகக் கூறி, உண்மையை மூடிமறைக்க சிறை உயர் அதிகாரிகள் திட்டமிட்டு முயன்றனர் என்றும் வெளிப்படுத்தியது.

இந்த வழக்கில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் V.R.கிருஷ்ணய்யர், R.S.பதக், O.சின்னப்ப ரெட்டி ஆகியோர் அடங்கிய அமர்வு 20.12.1979 அன்று வழங்கிய தீர்ப்பு, இந்திய மனித உரிமை வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. அந்தத் தீர்ப்பில், சிறைகளுக்குள் Official மற்றும் Non-Official Visitors எந்தத் தடையுமின்றி வந்து சிறையைப் பார்வையிடுவதும், விசாரிப்பதும் எவ்வளவு அவசியம் என்பதையும், மனிதத்தன்மை சிறைச் சுவர்களுக்குள் நுழைந்தவுடன் கைவிடப்பட வேண்டிய உரிமை அல்ல என்பதையும் உச்ச நீதிமன்றம் உறுதியாகப் பதிவு செய்தது.

சிறை என்பது தண்டனைக்கான இடமாக இருக்கலாம். ஆனால் அது மனிதத்தன்மை இழந்த இடமாக இருக்க முடியாது. Visitors அமைப்பு செயல்படவில்லை என்றால், சிறைக்குள் நடப்பவை வெளியுலகத்துக்குத் தெரியாமல் மறைந்துவிடும். அது செயல்பட்டால், அங்கு நடப்பவை வெளிச்சத்திற்கு வரும். இது சட்டத்தின் கோரிக்கை மட்டுமல்ல; மனிதநேயத்தின் கட்டளை.

**(ஊழல் தொடர்ந்து கசியும் )**

**-ராம்கி**

www.nakkheeran.in

கல்லூரி முன்பு மாணவர்கள் போராட்டம்





சோலை ராணி

# காதலைக் கட்டுப்படுத்திய கல்லூரி! உயிரை விட்ட மாணவி!

'காதலிப்பது குற்றமா?' -சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கலைக் கல்லூரி முன்பாக மாணவர்கள் கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

என்ன விவகாரம் இது?

அந்தக் கல்லூரியில் பயின்று வந்த சிவகாசியைச் சேர்ந்த சோலைராணி (வயது 19), வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தந்தை இல்லாத நிலையில் தாயுடன் வசித்து வந்த மாணவி, சம்பவம் நடந்த இரவு தாய் மருத்துவமனையில் பணியிலிருந்த நேரத்தில் தூக்கிட்டு உயிரிழந்ததாக சிவகாசி டவுண் காவல்நிலையத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளனர். மாணவியின் மரணத்திற்கு, காதல் தொடர்பான பிரச்சனைகளே காரணம் என்கிறார்கள்.

அதே கல்லூரியில் பயிலும் சீனியர் மாணவருடன் மாணவி பழகியதாகவும், இருவரின் புகைப் படம் முதல்வரின் கவனத்திற்குச் சென்றதையடுத்து, சோலைராணியை அறை முன்பாக நீண்ட நேரம் காத்திருக்க வைத்து கடுமையாகக் கண்டித்ததாகவும் மாணவர்கள் கூறினர். இனி இப்படிச் செய்ய மாட்டேன் என மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கப்பட்ட நிலையில், அவமானத்துடன் கல்லூரியிலிருந்து வெளியேறிய மாணவி, 'எனக்கு நடந்ததை எழுதி வைத்துவிட்டே சாவேன்' என விரக்தியுடன் கூறியதாகவும், சொன்னபடியே உயிரை விட்டுவிட்டதாகவும் அவர்கள் வேதனையை வெளிப்படுத்தினர்.

இதுகுறித்து முதல்வர் டாக்டர் அசோக்கை தொடர்பு கொண்டு பேசியபோது "மாணவியின் சமூக வலைத்தள ஸ்டேட்டஸ் மூலமாக விஷயம் எனக்கு தெரியவந்தது. உடனடியாக அவரது தாயிடம் பேசினேன். மாணவியை அவமானப் படுத்தவில்லை'' என விளக்கமளித்தார்.

சோலைராணியின் உறவினர் செந்தில், "மாணவர்கள் போராடுறது காதலை நியாயப்படுத்தணும்னு இல்ல. அந்த மாணவிக்கு கல்லூரி நிர்வாகம் காட்டிய கண்டிப்பும், அவமானப் படுத்திய விதமும்தான் இப்ப பிரச்சினையா வெடிச்சிருக்கு. இப்படிப்பட்ட நேரத்துல மாணவியை தனியா அழைச்சு பேசிட்டு, மனநிலையை புரிஞ்சுக்கிட்டு ஆலோசனை கொடுத்திருக்கணும். அவளுக்கு பாதுகாப்பு உணர்வு தரணும்; அது தான் கல்லூரி நிர்வாகத்தின் கடமை. ஆனா இங்க அது நடக்கல. பயமுறுத்துற மாதிரியும், அவமானப் படுத்துற மாதிரியும் நடந்துக்கிட்டதாலதான் மாணவர்கள் இப்ப ரோட்டுக்கு வந்திருக்காங்க. இந்தக் கல்லூரி நிர்வாகத்தினரை சிவகாசியில பெரிய இடமா பார்க்குறதால, யாராலும் எதிர்த்துப் பேசமுடியாத சூழல் இருக்கு. அதோட, சோலைராணி எழுதி வச்சிருக்காங்கன்னு சொல்லப்படுற கடிதத்தை, அவங்க அம்மாவிடருந்து வாங்கி சத்தமில்லாம மறைச்சிட்டாங்கன்னு சந்தேகமும் எழுந்திருக்கு'' என்றார்.



முதல்வர் அசோக்

சிவகாசி டவுண் காவல்நிலையத்திலோ "சோலைராணி லெட்டர் எதுவும் எழுதி வைக்கல. அவங்க கூட பழகுன பையனுக்கு மெசேஜ் அனுப்பிருப்பாங்க போல. சோலைராணியோட செல்போன் பேட்டன் லாக்ல இருக்கு. அத ஓபன் பண்ணுன பிறகு விசாரணை தொடரும். காவல்துறை யாரையும் காப்பாத்த நினைக்கல'' என்றனர்.

கல்லூரியில் மாணவர்களின் காதலைக் கட்டுப்படுத்த நினைத்த நிர்வாகம், உயிரின் மதிப்பை மறந்துவிட்டது.

**-ராம்கி**

# நுட வைத்தியர் கைது... மருத்துவமனைக்கு சீல்... பின்னணியில் மெடிக்கல் மாபியா?!

மாவட்ட ஆட்சியருக்கு வந்த புகாரின் அடிப்படையில், முறையாக அனுமதி பெறாமல் மருத்துவம் பார்த்ததால் கிளினிக்கிற்கு சீல் வைத்து, வைத்தியரை கைது செய்தது சிவகங்கை மாவட்ட காவல்துறை. ஒரு வைத்தியர் கைது செய்யப் பட்டவுடனேயே வழக்கமாக, அவர் போலி வைத்தியர் என்று சமூக வலைத்தளங்கள் அச்செய்தியை ஊதிப் பெரிதாக்கும். ஆனால், இந்த புத்தூர் கட்டு பாண்டி என்ற வைத்தியர் கைதை பொறுத்தவரை, 'இது நாட்டு வைத்தியத்தை அழிப்பதற்கான ப்ளான். பின்னணியில் மெடிக்கல் மாஃபியா இருக்கிறது' என்று கைதுக்கு எதிராகவும், மாவட்ட நிர்வாகத்திற்கு எதிராகவும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர், அவரது வைத்தியத்தால் பலனடைந்த பொதுமக்கள்.

"எலும்பு முறிவு, முடக்குவாதம், நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்களுக்கு நான் ஸ்பெஷலிஸ்ட். என்னை நாடி வருபவர்களுக்கு நான் நோய் தீர்க்கும் கடவுள். 18 சித்தர்களில் நான் ஒருவன். என்னை தொட்டுப் பார்க்கணும் என நினைக்கிறீர்களா? தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். கண்களில் ஒற்றிக்கொள்ளுங்கள். நான் தான் கடவுள்" என இன்ஸ்டாகிராமில் நேரடியாக லைவ் வீடியோ போடுவது நெடுஞ்செழியன் எனும் புத்தூர் கட்டு பாண்டியின் ஸ்டைல். சிவகங்கை மாவட்டம், நெற்குப்பை அருகே ஆத்திகாடு பகுதியைச் சேர்ந்த புத்தூர் கட்டு பாண்டி, தொடக்கத்தில் திருச்சி மாவட்டம்



புத்தூர் பாண்டி மருத்துவ மனை



மருத்துவ மனைக்கு சீல்



கைதான புத்தூர் கட்டு பாண்டி



S. No. 00176

Health For All

Indian Allied Health Association

(Registered under the Societies Registration Act, 21 of 1860)

CMS ED

VOCATIONAL CERTIFICATE

Register No. 0000827

This is to certify that N. NEDUNCHELIYAN

Son / Daughter / W/O P.R. NAGALINGAM

having successfully completed the (1½ year)

Vocational Course of COMMUNITY MEDICAL SERVICE & ESSENTIAL DRUGS FOR PRIMARY HEALTH CARE OF WHO (CMS ED)

at IAHA00072- MEENAKSHI SKILL TRAINING INSTITUTE, DINDIGUL (TN)

and passed the examination held in DEC 2021 - JUNE 2022

is hereby awarded this Certificate.

LUCKNOW

DATED :

DIRECTOR CHAIRMAN



Indian Paramedical Council

REGISTRATION CERTIFICATE

DIPLOMA IN COMMUNITY MEDICAL SERVICE & ESSENTIAL DRUGS

Dated 28 Mar.' 2023

| | |
|---|---|
| Registration No | 15721 |
| Name | N NEDUNCHELIYAN |
| Mother's Name | MEENATCHI |
| Father's Name | P.R. NAGALINGAM |
| Address | 2/832, MVS NAGAR, SINGAMPUNARI, SIVAGANGAI DT TAMIL NADU, PINCODE - 630 502 |
| Training Center | MEENAKSHI SKILL TRAINING INSTITUTE, DINDIGUL |
| Year of Passing | DEC' 2022 |
| Examining Body | INDIAN ALLIED HEALTH ASSOCIATION, LUCKNOW U.P |

Place : Delhi

Registrar Indian Paramedical Council

புத்தூர் பாண்டியின் சான்றிதழ்கள்

துவரங்குறிச்சியில் நுட வைத்தியராக பணியாற்றி வந்திருக்கின்றார். பின்னாளில், திண்டுக்கல்லை சேர்ந்த சித்த மருத்துவரின் சான்றிதழை துணைக்கொண்டு சிங்கம்புணரியில் வைத்திய சாலையை ஆரம்பித்திருக்கின்றார்.

வைத்தியம் செய்துகொள்ள வந்தவர்களை அருகில் வைத்துக்கொண்டு ஆயில் தேய்ப்பது, கட்டு கட்டுவது என நேரடியாக இன்ஸ்டாவில் லைவ் கொடுப்பதும், குணமடைந்தவர்களின் அனுபவங்களை சொல்லக்கூடிய வீடியோ பதிவுகளும் புத்தூர் கட்டு பாண்டிக்கு இந்த வைத்தியத்தில் அசுர வளர்ச்சியை பெற்றுத் தந்திருக்கிறது. அதுபோல், தினசரி இத்தனை நபர்களுக்கு தான் வைத்தியம் என டோக்கனை கொடுத்து டிமாண்டை உருவாக்கியதும், இவர் தனது தயாரிப்பாகக் கொடுக்கும் 200 மி.லி. தைலத்தை ரூ.600-க்கு விற்பனை செய்வதும் இவருக்கு பெரிய அளவு வருவாயை ஈட்டித் தந்திருக்கிறது.

இந்த நிலையில், தேவகோட்டை சார்-ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வாட்ஸ் தலைமையில் சிவகங்கை மாவட்ட சுகாதாரத் துறை இணை இயக்குனர் அருள்தாஸ், திருப்பத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் செல்வகுமார், மாவட்ட சுகாதார அலுவலர், சிங்கம்புணரி வட்டாட்சியர், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், சிங்கம்புணரி நகர காவல் ஆய்வாளர் உள்ளிட்டோர், சிங்கம்புணரியிலுள்ள புத்தூர் கட்டு பாண்டியின் மருத்துவமனைக்கு அதிரடியாக சென்று, “நீங்கள் என்ன படித்துள்ளீர்கள்? அதற்கான சான்றிதழ் எங்கே? இங்குள்ள தைலங்கள் ஐ.எம்.ஏ.வின் அனுமதி பெற்று தயாரிக்கப்பட்டதா?” எனப் பல கேள்விகளை புத்தூர் கட்டு பாண்டியிடம் தொடர்ந்து கேட்டிருக்கின்றனர். அவரும், தன்னிடமிருந்த சான்றிதழ்களை காண்பிக்க, “இது பொய்யான சான்றிதழ்” எனக் கூறியவர்கள், அவரை மருத்துவமனையை விட்டு வெளியே அழைத்துவந்து, கைது செய்வதாக அறிவித்தனர்.



பின்னர், அவரது உரிமத்தில் சந்தேகம் இருப்பதாகவும், கால், கைகளில் தேய்ப்பதற்கு பயன்படுத்தும் தைல பாட்டில்களில் தயாரிப்பு தேதி, காலாவதி தேதி, தைலம் தயாரிக்கும் பொருட்களின் விபரம் இல்லாததால், தைல பாட்டில்கள், எண்ணெய் வகைகள், பச்சை மூலிகை போன்ற பொருட்களை பறிமுதல் செய்த பின் மருத்துவமனைக்கு சீல் வைத்தனர். புத்தூர் கட்டு பாண்டியோ, “மக்களே, உங்களுக்காக நான் இருந்தேன், என்னை கைது செய்கிறார்கள்” என்று அங்கே குழுமியிருந்த மக்களை நோக்கி அழுது அரற்ற, அங்கிருந்த போலீஸ் அதிகாரிகளைப் பார்த்த மிரட்சியில், மக்கள் யாருமே கேள்வி கேட்காத நிலையில் போலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார் புத்தூர் கட்டு பாண்டி.

இதுகுறித்து மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குனர் அருள்தாஸ் கூறுகையில், “அவரிடம் சிகிச்சை செய்வதற்கான மருத்துவச் சான்றிதழ்கள் இல்லை. அதுபோக, பிளஸ் 2 வரை படித்த நெடுஞ்செழியன் என்ற புத்தூர் கட்டு பாண்டி, திண்டுக்கல்லில் அனுமதி பெறாத நிறுவனத்தில் பாரா மெடிக்கலில் உதவி செவிலியர் படிப்பை படித்துள்ளார். மேலும், இவர் திண்டுக்கல்லை சேர்ந்த பிரபல மருத்துவரின் சான்றை போலியாகப் பயன்படுத்தி மருத்துவமனையை நடத்தி வந்துள்ளார் என்பதும் தெரியவந்ததால் அவர்மீது புகாரளிக்கப்பட்டது” என்றார். புத்தூர் கட்டு பாண்டியின் கைது, மாவட்ட நிர்வாகத்திற்கு எதிராக சமூக வலைத்தளத்தில் பல அதிர்வுகளை உருவாக்கியுள்ளது.

புத்தூர் கட்டு பாண்டியிடம் சிகிச்சை யெடுத்து பலனடைந்த பரமக்குடி செல்ல முத்துவோ, “எனக்கு நீண்ட நாட்களாக மூட்டு வலி இருந்தது. நான் பல ஊர்களில் இருக்கும் மருத்துவர்களைப் பார்த்தேன். ஆனால் எந்த மருத்துவமும் எனக்கு சரிப்பட்டு வரல. கடைசியில், மூட்டு வலியை விட ஒவ்வொரு

**தடுமாற்றம் இல்லாமல் செய்யும் தவறுகள் எல்லாம் தவறு என்ற கணக்கில் சேராது... அதன் பெயர் சாமர்த்தியம்!**

ஆஸ்பத்திரியா போயிட்டு வர வலி தான் அதிகமாகிடுச்சு. அதனால மருத்துவம் பார்க்கறதையே விட்டுட்டேன். என்னோட சொந்தக்காரங்க கல்யாணத்துக்கு போயிருந்தப்ப பஸ்ல வந்த ஒருத்தர் புத்தூர் கட்டு பாண்டியை பத்தி சொன்னாரு. சரி, போய் பார்க்கலாம்னு போய் பார்த்தேன். பார்த்த ஒரு மாசத்திலேயே அவர் கொடுத்த தைலத்துல என்னோட வலி கொஞ்சம் குறைஞ்சிடுச்சு. இப்ப அவரோட தைலத்தை தேய்ச்சு நல்லபடியா இருக்கேன்'' என்றார்.



செல்லமுத்து

சொக்கலிங்கபுரத்தை சேர்ந்த பாப்பாத்தி என்பவரோ, "எங்க ஊர்க்காரங்க கூட ரொம்ப வருஷமா கால் முறிஞ்சி ஆங்கில மருத்துவம் பார்த்தார்கள். எதுவுமே பலனளிக்காமல் இருந்தபோது தான், தெரிஞ்சவங்க இந்த ஊருக்கு போயி அவங்ககிட்ட புத்தூர் கட்டு கட்டுங்க, நல்லா இருக்கும்னு சொன்னாங்க. அதேபோல அங்க போய் கட்டு கட்டிட்டு வந்தாங்க. கட்டு கட்டுன ரெண்டு மாசத்துலேயே அவங்க கொஞ்சம் நல்லாவே எந்திரிச்சு நடக்க ஆரம்பிச்சிட்டாங்க'' என்றார்.

பெயர் கூறாத பாரம்பரிய வைத்தியர் ஒருவரோ, ''புத்தூர் கட்டு பாண்டியின் மருத்துவமனையில் அலோபதி சம்பந்தமான எந்தவொரு பொருளையும் எடுக்கவில்லை. அப்படியிருக்கையில் அவரை அவசர அவசரமாகக் கைது செய்யவேண்டிய அவசியம் என்ன? அரசு மருத்துவர்கள் என்று கூறிக்கொண்டு அரசாங்கத்திடம் சம்பளத்தை பெற்றுக்கொண்டு, தனியார் மருத்துவமனைக்கு செல்ல மாட்டேன் என்று உத்தரவாதம் கொடுத்துவிட்டு, பல அரசு மருத்துவர்கள் தனியார் மருத்துவமனைகளை கட்டி பிராக்டீஸ் செய்கிறார்கள்.

மாவட்ட நிர்வாகம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? குழந்தையை இயற்கையாகப் பிறக்கவிடாமல், சிசேரியன் செய்தால் பணம் கிடைக்குமென்ற அற்ப ஆசையில், தண்ணீர் சத்து கூடிவிட்டது, தண்ணீர் சத்து குறைந்து விட்டது என்று சொல்லி, அந்த குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே ஆபரேஷன்களை செய்யக்கூடிய மருத்துவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? அடிபட்டால் உடனே ஆபரேஷன் செய்தால் சரியாகும் என்ற தவறான எண்ணத்தை உடைத்தவர் புத்தூர் கட்டு பாண்டி. பல லட்சங்களையும், வலி, வேதனைகளையும் மிச்சம் செய்தவர். அது பொறுக்காத அலோபதி மருத்துவ உலகம் தான் இந்த வேலையை செய்திருக்கிறது. இது நாட்டு வைத்தியத்தை அழிப்பதற்கான பிளான். இதன் பின்னணியில் மெடிக்கல் மாஃபியா இருக்கிறது'' என்றார் அவர்.


''பாரம்பரியமாக வைத்தியம் செய்பவர்களுக்கு தாசில்தார் அந்தஸ்திலான அதிகாரி ஒரு சான்றிதழ் கொடுப்பார். அதனை வைத்து வைத்தியம் பார்க்கலாம். ஆனால் விளம்பரம் செய்யக்கூடாது. அந்த தவறு தான் இப்போது புத்தூர் கட்டு பாண்டிக்கு கைது வரை சென்றுள்ளது. இன்னொன்று, பாரம்பரிய வைத்தியர் என்றாலும் தங்களது தயாரிப்புகளுக்கு அவசியம் அனுமதி வாங்க வேண்டும். அதுவும் இல்லை. புத்தூர் கட்டு பாண்டி திறமையானவர் என்பதில் சந்தேகமில்லை. நமக்கு என்ன தேவையோ அதை மட்டும் பேச வேண்டும். 18 சித்தரில் தானும் ஒருவன் எனவும், என்னை வணங்க வேண்டும் எனவும் வற்புறுத்திப் பேசுவதை கண்டும்காணாமல் இருக்க முடியாது. எனினும், இவர் மீதான கைது நடவடிக்கை பல சர்ச்சைகளை எழுப்பியுள்ளது என்பது நிஜம்'' என்கின்றார் மாவட்ட மருத்துவ அலுவலர் ஒருவர்.



பாப்பாத்தி

பாரம்பரிய மருத்துவம் காக்கப்பட வேண்டுமென்பதே பலரின் கோரிக்கை. இதற்கு தமிழ்நாடு அரசின் அரவணைப்பும், ஒத்துழைப்பும் அவசியம்.

**-நாகேந்திரன்**




# அமித்ஷாவை கடுப்பாக்கிய மதுராந்தகம்!

"ஹலோ தலைவரே.. கவர்னர் ரவியின் வெளிநடப்புடன் தொடங்கிய இந்த ஆண்டின் முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தின் கடைசி நாளில் பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், என்னுடைய இலக்கை அடைந்துவிட்டேன்னு சொல்லியதைக் கவனிச்சீங்களா?"

''ஆமாம்பா கவனிச்சேன். அருமையான உரையாச்சே"

"முதல்வர் பேசறப்போ, 2021-ல் 6ஆவது முறையா ஜெயிச்சி வந்தப்போ மகிழ்ச்சியா இருந்துச்சு. ஆனாலும், இந்தப் பொறுப்பை எப்படி செய்யப் போறேன்? மக்கள் விரும்பும் ஆட்சியை நடத்தமுடியுமா? வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேத்திடமுடியுமா?ன்னு ஒரு கவலை இருந்தது. முந்தைய அ.தி.மு.க.வின் 10 ஆண்டுகால ஆட்சியில் எல்லா துறையிலும் தமிழகம் மோசமான பின்னடைவில் இருந்துச்சு, மத்திய அரசு ஓரவஞ்சனையுடன் செயல்பட்டுச்சு. இத்தகைய நெருக்கடிகளையெல்லாம் சமாளிச்சு நல்லாட்சி கொடுக்கணுமேன்னு கவலை இருந்துச்சு. ஆனா, 5 ஆண்டுகால ஆட்சி நிறைவில் மனமகிழ்ச்சியா இருக்கேன். திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளால் தமிழகம் தலைநிமிர்ந்திருக்கு. மக்களும் மகிழ்ச்சியாக இருக்கிறாங்கன்னு பெருமிதமா சொன்னாரு முதல்வர் ஸ்டாலின். மேஜையைத் தட்டி ஆரவாரமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தி னாங்க தி.மு.க. உறுப்பினர்கள்."

"விசில் சின்னம் கிடைச்சதில விஜய் ரொம்பவே குஷியாக இருக்கிறாராமே?"




"ஆமாங்க தலைவரே.. விசில் சின்னம் கேட்டு ரொம்ப நாளைக்கு முன்னமே தேர்தல் கமிசன்ல விண்ணப்பிச்சிருந்தாரு விஜய். அந்த விண்ணப்பம் மீது, தேர்தல் நோட்டிஃபிகேசன் வெளியிட்டபிறகு முடிவெடுத்துக்கலாம்னு தேர்தல் கமிஷனின் ஆணையர்கள் திட்டமிட்டிருந்தார்களாம். அதனால அந்த விண்ணப்பம் கிடப்பில் போடப்பட்டிருந்தது. இந்த நிலைமையிலதான், சி.பி.ஐ. என்கொயரிக்காக டெல்லிக்கு இரண்டாவது முறையா விஜய் போனார். அப்போ சில சீக்ரெட் மேட்டரும் நடந்திருக்கு. அதுல பா.ஜ.க.வோட டெல்லி தலைமை சொன்ன கண்டிஷன்களுக்கு ஒத்துக்கிட்டாராம் விஜய். அதற்கு முதல்கட்டமாக, விஜய்க்கு மகிழ்ச்சியை தரத்தான் அவர் எதிர்பார்த்த சின்னத்தை, தேர்தலுக்கு 3 மாதம் இருக்கும் நிலையில், முன்கூட்டியே அவர் விண்ணப்பத்தை தூசுதட்டி எடுத்து தேர்தல் கமிசன் ஒதுக்கி ஆர்டர் போட்டுருச்சின்னு டெல்லி தகவல் சொல்லுது. அதுமட்டுமில்ல, விஜய்க்கு மட்டும் முன்கூட்டியே சின்னத்தைத் தந்தா தேவையில்லாத சர்ச்சை கிளம்பும்னு யோசிச்சு, கமல்ஹாசன் கட்சிக்கும் டார்ச் லைட் சின்னத்தை கொடுத்திருச்சு தேர்தல் கமிஷன்."

"தமிழக பா.ஜ.க. ஏற்பாடு செஞ்ச மதுராந்தக கூட்டத்துக்கு பிரதமர் மோடி வந்துட்டுப் போனார். இந்த கூட்டம் பத்தி அமித்ஷாவுக்கு அதிருப்தியாமே?"

"ஆமாம் தலைவரே.. மோடிஜி கலந்துக் கிட்ட கூட்டத்துல 2 லட்சம் பேர் தன்னெழுச்சியா கலந்துக்கிட்டாங்கன்னு தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார்

www.nakkheeran.in



விஜய்யுடன்
கு.ப.கிருஷ்ணன்

நாகேந்திரன் டெல்லிக்கு தகவல் பாஸ் செஞ்சிருக்காரு. ஆனா, மத்திய உளவுத்துறையினர், கூட்டத்துக்கு வந்தவங்க, வெளியே நின்னுக்கிட்டு இருந்தவங்க வெறும் 50,000 ஆயிரம் பேர்தான்னு அமைச்சர் அமித்ஷாவுக்கு ரிப்போர்ட் கொடுத் திருக்காம். அதைப் பார்த்துத்தான் தமிழக பா.ஜ.க. மீது அமித்ஷாவுக்கு ஏமாற்றமாம். மாநில உளவுத் துறைகிட்டே விசாரிச்சா, மோடிஜி கலந்துக்கிட்ட கூட்டத்துல போடப்பட்ட நாற்காலிகளே 40,000 தான். அதிலும் பல நூறு நாற்காலிங்க காலியாகத் தான் இருந்துச்சுன்னு முதல்வர்க்கு ரிப்போர்ட் கொடுத்திருக்காங்க. அதுமட்டுமல்ல, இந்த கூட் டத்துக்கு ஒன்றரைக் கோடி செலவானதா தமிழக பா.ஜ.க. கணக்கு சொல்லுதாம். கூட்டத்தை சேர்க்க றதுக்காக ஒரு வண்டிக்கு 5,000 கொடுத்திருக்காங்க. பஸ்ஸுக்கு கொஞ்சம் கூடுதலா கொடுக்கப்பட்டி ருக்கு. இப்படி செலவு செஞ்சும் எதிர்பார்த்த அளவுக்கு கூட்டத்தைச் சேர்க்கமுடியலை. இந்த கூட்டத்தைக் காட்டி, பா.ஜ.க. முக்கிய பிரமுகர் ஒருவர் கோடிக்கணக்கில் வசூல்செய்திருக்காரு. கூட்டத்துக்கான மேடை செட்டிங், பந்தல், எலெக்ட்ரிக்கல் ஐட்டம் உள்ளிட்ட காண்ட்ராக்டை அ.தி.மு.க.வின் எஸ்.பி.வேலுமணி, தனது பினாமி யான கோவை தங்கத்துக்கு வாங்கிக்கொடுத்தாரு. இந்த வேலையெல்லாம் செய்ய, வேலுமணியின் இன்னொரு பினாமியான பூபதி என்பவருக்கு சப்-காண்ட்ராக்ட் கொடுத்தாராம் கோவை தங்கம். அரசியல் கட்சிகள் நடத்தும் பொதுக்கூட்டங் களுக்கு நீதிமன்றம் விதித்துள்ள எந்த கண்டிஷன் களையும் மோடிஜியின் கூட்டத்தில் ஃபாலோ பண்ணலை.”

“அரசுத் துறைகளில் பெண்களுக்கு எதிரான பாலியல் புகாரில் சிக்கும் அலுவலர்களை கடுமை யாக தண்டிக்காம விட்டுடுறாங்கன்னு உயரதிகாரிங்க மீது குற்றச்சாட்டு அதிகமா வருதே?”

“தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுது தமிழ்நாடு இ-கவர்ன்ஸ் நிறுவனம். இங்க சிவக்குமார்னு ஒரு உதவியாளர். 54 வயசாகுது. இந்த நிறுவனத்துல பல பெண்கள் வேலை பார்க்கிறாங்க. அவங்ககிட்டே ஆபாசமா நடந்துக்கிறது, ரெட்டை அர்த்தத்துல பேசறதுன்னு தொடங்கி சில சில்மிச வேலைகளை செஞ்சிருக்காரு சிவக்குமார். அவரது செக்ஸ் சேட்டைகளைப் பத்தி கம்ப்ளைண்ட் போக, அவர சமீபத்துல சஸ்பெண்ட் செஞ்சாங்க. ஆனா, இதுக்கு முன்னாடி இதே கம்ப்ளைண்ட்ல 2 முறை சஸ்பெண்ட் ஆகியிருக்காரு அவர். இது மூணாவது முறை. ஒவ்வொருமுறை சஸ்பெண்ட் ஆகும்போதும் கோட்டையிலுள்ள உயரதிகாரிகளை புடிச்சி, சஸ்பெண்டை கேன்சல் செய்யவெச்சு மீண்டும் வேலையில சேர்ந்துடுவாரு. இப்பவும் சஸ்பெண்டை கேன்சல் பண்ண வைக்க அதிகாரிகள் உதவியை நாடியிருக்காரு. இதனால பாதிக்கப்பட்ட பெண்கள் டிபார்ட்மெண்ட் மீது ஏகக் கடுப்புல இருக்காங்க.”

“போக்குவரத்துத்துறையில வட்டாரப் போக்குவரத்து முதல்நிலை ஆய்வாளரான நல்ல தம்பி மீதும் இதேமாதிரி புகார் வந்திருக்காமே?”

“இந்த நல்லதம்பிய வால்பாறைக்கு சமீபத்துலதான் நியமிச்சாங்க. இதுக்கு முன்னாடி ஆலங்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத் தில் இவர் வேலைபார்த்து வந்தப்போ, ஏகப்பட்ட ஊழல்கள் மற்றும் பெண்களிடம் தவறாக அணுகி யது உட்பட பல புகார்கள் போக்குவரத்துத்துறை கமிஷனருக்கு போயிருக்கு. இதையடுத்து காத் திருப்பு பட்டியல்ல நல்லதம்பியை வெச்சிருந்தாங்க. ஆனா, இவர் சமூகத்தைச் சேர்ந்த அரசியல் பெண் பிரபலம் ஒருவர் மூலம் உயரதிகாரிகளிடம் பேசி, தன்மீதுள்ள புகார் ஃபைல்களையெல்லாம் க்ளியர் செய்யவெச்சு, வால்பாறைக்கு போஸ்டிங் வாங்கிட் டாரு. இதனால, ஆதாரங்களுடன் புகாரளித்த பெண்கள் எல்லாம் கடும்கோபத்தில் இருக்காங்க! இப்படி பெண்களுக்கும் ஊழல்களுக்கும் எதிரான குற்றச்சாட்டுகளில் சிக்குபவர்களை கடுமையாகத் தண்டிக்காம மீண்டும் மீண்டும் பணிவாய்ப்பு



சீமானுக்கு கொலை மிரட்டல் விஜய் கட்சி நிர்வாகி மீது வழக்கு

**கோவையில் சேற்றில் சிக்கிய காட்டு யானை, 3 மணி நேரம் போராடி வனத்துறையினர் மீட்டனர்**

கொடுக்கிறதினாலதான் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு பாதுகாப்பில்லாத சூழல் அதிகரிக்குதுன்னு ஒரே குற்றச்சாட்டா இருக்கு.”

“பொங்கல் பரிசாக தமிழக அரசு கொடுத்த பணத்தை ஏன் தனிநபர்களின் வங்கிக் கணக்கில் போடவில்லை. அதைவெச்சு தேர்தல் நேரத்துல தி.மு.க.வுக்கு ஆதரவான இம்பாக்டை ஏற்படுத்தப் பார்க்கிறீங்களான்னு சுமந்த் சி.ராமன் விமர்சனம் செய்திருக்கிறாரே...”

“ஆனா, இதுக்கான பதிலை தமிழக சபாநாயகர் அப்பாவு ஏற்கெனவே வேறொரு விஷயத்துல கொடுத்திருக்கார் தலைவரே. தமிழகத்தில் மழைவெள்ளத்தால பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை கையில் கொடுத்தபோது, இந்திய நிதியமைச்சரான நிர்மலா சீதாராமன், ‘அதுதான் பிரதமர் மோடி இந்தியர்கள் ஒவ்வொருவருக்கும் வங்கிக் கணக்கு தொடங்கி கொடுத்திருக்காரே. அதுல போடவேண்டியதுதானே’ன்னு கேள்வியெழுப்பு னாங்க. அதுக்கு சுடச்சுட பதில்கொடுத்த அப்பாவு ‘நாங்க போட ரெடி, ஆனா அப்படி வங்கியில போட்டா குறைந்தபட்ச இருப்புத் தொகை வைக்கலைன்னு வங்கிகள் பணத்தை எடுத்திருது. ஏ.டி.எம்.மை அதிகமா பயன்படுத்தறதா பணம் எடுத் திருது. எஸ்.எம்.எஸ். அனுப்புறதுக்குனு கட்டணம் வசூலிக்குது. சாமான்ய மக்கள்ட்ட இந்த மூணு வகையிலேயும் 37,000 கோடி வசூல் பண்ணியிருக்கீங்க. சாமான்ய மக்களுக்கு எங்க முதல்வர் கொடுக்கிற தையும் எடுத்துட்டுப் போயிட்டா நாங்க என்ன செய்றது?’ன்னு கேட்டார். அது இந்தப் பொங்கல் பரிசு விவகாரத்துக்கும் பொருந்தும்தானேன்னு தி.மு.க.வினர் பதிலடி கொடுத்திருக்காங்க.”

“என்னப்பா த.வெ.க. தலைவர் விஜய்யை ஒரு ஜோதிடர் கெட்டியா பிடிச்சுக்கிட்டார் போலி ருக்கே...?”

“அதைக் கேட்கிறீங்களா... ரிக்கி ராடன் பண்டிட் வெற்றிவேல்னு ஒரு ஜோதிடர். இவரைப் பற்றி நக்கீரனில் கட்டுரை வந்திருக்கிறது. இவர் முன்னாள் அமைச்சர் முத்துசாமிக்கு மிகவும் நெருக்க மானவர். ‘முத்துசாமி வீட்டில் இருப்பவர்களெல்லாம் த.வெ.க.வுக்கு ஓட்டுப்போட தயாராகயிருக்கிறார்கள்’ என அவர் யு-டியூப்பில் பேச, அது விஜய்யை மிகவும் கவர்ந்துவிட்டது. மூன்று வீடியோக்களில் விஜய் முதல்வராக வருவார் என்று வெற்றிவேல் கூற, விஜய்யின் ஆஸ்தான ஜோதிடராகிவிட்டார். இவருக்கு டெல்லி தொடர்புகள் மிகவும் அதிகம். டெல்லியில் இருக்கும் ஒரு சி.பி.ஐ. ஆபீசரை வைத்து, என்னென்ன கேள்விகள் கேட்பார்கள், எப்படி விசாரணை செல்லும் என சில விவரங்களைப் பெற்று விஜய்க்குக் கொடுத்தாராம். இதனால் இருவரது நட்பும் நெருக்கமாக, அவரை தனது காரில் ஏற்றிக் கொண்டு த.வெ.க. செயல் வீரர்கள் கூட்டத்துக்கு வந்திருக்கிறார் விஜய். இவர் ஜெ., சசியையே ஏமாற்றியவர். பதிலுக்கு இவரது வீட்டை அடித்துநொறுக்கி, கார்டனுக்குக் கொண்டு வந்து இவரை வசமாகக் கவனித்தார் சசிகலா. அத்தகையவரை த.வெ.க.வின் செய்தித் தொடர்பாளராக நியமித்திருக்கிறார் விஜய். இந்த ஜோதிடர் விஜய்யை என்ன செய்யப் போகிறாரோ என வருத்தப்படுகிறார்கள் விஜய்க்கு நெருக்கமானவர்கள்.”


சபாநாயகர் அப்பாவு

“ஓ.பி.எஸ். கூடாரமே காலியாகிடும் போலிருக்கே?”

# அமைச்சர் வீட்டில் த.வெ.க.வுக்கு ஓட்டு!

“ஆமாம் தலைவரே.. மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம், ஜே.சி.டி. பிரபாகரன் என ஓ.பி.எஸ். அணியிலிருந்து பலர் பல கட்சிகளுக்குத் தாவுகிறார்கள். சமீபமா கு.ப. கிருஷ்ண னும் த.வெ.க.வுக்கு வந்துசேர்ந் திருக்கிறார். அவர்களை எல்லாம் அனுப்பிவைப்பதே ஓ.பி.எஸ். தானாம். தர்மர் என்கிற எம்.பிக் காகத்தான் எடப்பாடியிடம் சண்டை போட்டுப் பிரிந்தார் ஓ.பி.எஸ். எனச் சொல்வார்கள். அந்த தர்மர் எடப்பாடியிடம் வந்து சேர்ந்து விட்டு, என்னை ஓ.பி.எஸ்.தான் அனுப்பிவைத்ததாக எடப்பாடி யிடம் சொல்லியிருக்கிறாராம்.”



www.nakkheeran.in

''மறுபடியும் ஆதவ் அர்ஜுனாவுக்கும் விஜய்க்கும் தகராறாமே?''


''ஆமாம், விஜய்க்கான செலவுகளையெல்லாம் ஆதவ்தான் ஏற்கிறார். ஆனால், வீண் செலவுகள் வாய்ஸ் ஆப் காமன் அக்கவுண்டுகளில் வருவதை எதிர்க்கிறார். அதுகுறித்து இருவருக்குமிடையே தகராறு ஓடிக்கொண்டிருக்கிறது.''

''அ.ம.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மாணிக்கராஜா தி.மு.க.வில் சேர்ந்ததில் தேர்தல் கணக்கு இருக்குதாமே?''

''ஆமாங்க தலைவரே, கோவில்பட்டி தொகுதியில் 2021 தேர்தலில் டி.டி.வி.தினகரன் போட்டியிட்டு அ.தி.மு.க. கடம்பூர் ராஜூவிடம் தோற்றுப்போனார். அப்போ டி.டி.வி.தினகரன் 56,153 வாக்குகள் வாங்கியிருந்தார். வர்ற 2026 தேர்தலில், கோவில்பட்டி தொகுதியை தனக்காக தினகரன் தருவார்னு மாணிக்கராஜா எதிர்பார்த்திருந்தார். அதேபோல், அ.தி.மு.க. கூட்டணியில் சேர முடிவெடுத்தபோது, தகுதிநீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏ.க்களுக்கான தொகுதிகளை பெற்றுத்தருவேன்னு உறுதியளித்தார் தினகரன். ஆனால், கோவில்பட்டியில் கடம்பூர் ராஜூ களமிறங்கவுள்ளதால் அத்தொகுதியை தினகரனின் கட்சிக்கு ஒதுக்க முடியாதுன்னு கைய விரிச்சுட்டாங்க. இதுல மாணிக்கராஜா அப்செட். தன்னை தினகரன் கைவிட்டுட்டாரேன்னு விரக்தியில் தினகரனை எதிர்த்து கேள்வியெழுப்ப, அவரை கட்சியிலிருந்து நீக்கினார் தினகரன். உடனே அவரை அமைச்சர் கீதாஜீவன் தி.மு.க. பக்கம் இழுத்திட்டு வந்துட்டார். கோவில்பட்டியை பொறுத்தவரை பெரும்பாலும் தி.மு.க. போட்டியிடுவதில் விருப்பம் காட்டுவதில்லை. கம்யூனிஸ்ட் அல்லது ம.தி.மு.க.விற்குத்தான் அத்தொகுதியை கொடுத்திடும். இம்முறை அ.தி.மு.க.வின் கடம்பூர் ராஜூவை எதிர்த்து தி.மு.க. சார்பில் மாணிக்கராஜா களமிறங்குவார்னு எதிர்பார்க்கிறாங்க.''

''ஊட்டி காவல்துறையில் திடீர் பரபரப்பு ஏற்பட்டிருக்கே?''

''நீலகிரி மாவட்டத்தில் கஞ்சா பயன்பாடு அதிகமாக இருப்பதைக் கண்டுபிடித்த மாவட்ட காவல் துறையினர், தீவிரமாக மாவட்டம் முழுமைக்கும் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போ ஊட்டியை சேர்ந்த குரூஸ் என்கின்ற வாலிபர் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டது தெரியவந்ததால் அவரை போலீசார் கைதுசெய்தனர். விசாரணையில், ஊட்டி மத்திய போலீஸ் நிலையத்தில் போலீஸ்காரராகப் பணியாற்றி வந்த நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த நசீர் அகமதுக்கும் அவருக்கும் தொடர்பிருப்பது தெரியவந்திருக்கிறது. இந்நிலையில் நசீர் அகமது தலைமறைவாக, 3 தனிப்படைகள் அமைத்துத் தேடி, அவரை கோவையில் வைத்து போலீசார் கைதுசெய்து ஊட்டிக்கு அழைத்துவந்தனர். கஞ்சா விற்பனைக்காக கேரள மாநிலம் அட்டப்பாடி அருகேயுள்ள கோட்டத்தொரை பகுதியைச் சேர்ந்த மோகனசுந்தரம் என்ற கஞ்சா வியாபாரியிடமிருந்து கஞ்சாவை வாங்கிவந்து நீலகிரியில் விற்பனை செய்துவந்ததாகத் தெரியவந்தது. இதனை தொடர்ந்து போலீசார் கோட்டதொரைக்குச் சென்று மோகனசுந்தரத்தை கைதுசெய்துள்ளனர். இந்தத் தகவலை மாவட்ட எஸ்.பி.க்கு சரியான முறையில் தெரிவிக்கவில்லை என குற்றச்சாட்டு எழ, ஊட்டி நகர போக்குவரத்து சப்-இன்ஸ்பெக்டர் அருண் கூடலூருக்கும், ஊட்டி மத்திய போலீஸ் நிலைய தனிப்பிரிவு போலீஸ்காரர் ஜெயக்குமார் தேவாலா போலீஸ் நிலையத்திற்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.''



# மானநஷ்ட வழக்கு

"மங்காத்தா மறுவெளியீட்டில் பிரச்சனை செய்த விஜய் ரசிகர்களை, அஜித் ரசிகர்கள் வெளுத்துவாங்கியிருக்கிறார்களாமே?"

"நிஜம்தான் தலைவரே, நடிகர் அஜித்குமார் நடித்த 'மங்காத்தா' படம் கடந்த வெள்ளிக்கிழமை யன்று தமிழ்நாடு முழுவதும் ரீ-ரிலீஸ் செய்யப் பட்டது. சிவகங்கை மாவட்டம் காரைக்குடியி லுள்ள தியேட்டரில் படம் பார்க்க அஜித் ரசிகர் கள் குவிய, அஜித் அறிமுக காட்சியின்பொழுதும் பாடல்களின் பொழுதும் த.வெ.க. கொடியினைக் காட்டி இடையூறு செய்திருக்கின்றனர் விஜய் ரசிகர்கள். இது தேவையில்லாத வேலை என அஜித்குமார் ரசிகர்கள், விஜய் ரசிகர்களிடம் அட்வைஸ் செய்ய, அப்போதைக்கு ஒதுங்கிய விஜய் ரசிகர்கள் அடுத்தடுத்த காட்சியிலும் த.வெ.க. கொடியினைக் காண்பிக்க... எரிச்சலான அஜித் ரசிகர்கள் விஜய் ரசிகர்களை ஓட ஓட அடித்து விரட்டியிருக்கிறார்களாம்."


நயினார் நாகேந்திரன்

"பா.ஜ.க.வின் இந்நாள் தலைவரான நயினார் நாகேந்திரனும், அ.தி.மு.க.வின் கடையநல்லூர் எம்.எல்.ஏ.வுமான கிருஷ்ணமுரளியும் திடீரென கைகோத்திருக்காங்களாமே.. என்ன விவரம்?"

"பா.ஜ.க.வின் முன்னாள் மாஜித் தலைவருக்கு நெருக்கமானவர் தென்காசி மாவட்ட தலைவர் ஆனந்தன் அய்யாசாமி. இவருக்கு கடந்த நாடாளு மன்றத் தேர்தலில் சீட் வாங்கிக் கொடுத்துவிட வேண்டி பகீரத பிரயத்தனம் செய்தார் மாஜி தலைவர். இருப்பினும், தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் ஜான்பாண்டியனுக்கு தொகுதியை விட்டுக்கொடுத்தது பா.ஜ.க. இந்நிலையில் இம்முறை வாசுதேவநல்லூர் (தனி) சட்டமன்றத் தொகுதியில் ஆனந்தன் அய்யாசாமியை களமிறக்க தேசிய தலைமை வரை போராடிவருகின்றார். பா.ஜ.க. மாஜியின் திட்டத்தினை முறியடிக்க கடையநல்லூர் எம்.எல்.ஏ.வும் அ.தி.மு.க.வின் தென்காசி வடக்கு மா.செ.வுமான கிருஷ்ண முரளியிடம் ஒரே சாதி, உறவினர்கள் என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தையைத் தொடங்கி யிருக்கிறார் நயினார் நாகேந்திரன். அதாவது, ஆனந்தன் அய்யாசாமி வெற்றிபெற்றால் மாஜி மீண்டும் கட்சியின் லைம் லைட்டுக்கு வருவார். அதனால், நம்முடைய கூட்டணியிலிருக்கும் தமிழக மக்கள் முன்னேற்றக் கழக ஜான்பாண்டியனை அழைத்து அவருக்கு வாசுதேவநல்லூர் தொகுதியைக் கொடுத்துவிடுவோம். அதனால் மாஜி மண்ணைக் கவ்வும் என திட்டம் போட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது."


**"சரி, நானும் ஒரு தகவல் சொல்றேன். இலக்கம் 561, கௌரி வழி, மெக்மின் வில்லி, TN 37110-ஐ சேர்ந்த நீத்தா ஜெயகாந்தன் என்பவர், அமெரிக்கா வாரன் கவுண்டி ஷெரிப் அலுவலகத் தினை அணுகி, 'எனக்கு மயக்க திரவத்தை குடிக்கக் கொடுத்து மயங் கிய நிலையிலிருந்த என்னை பாலியல் வன்புணர்வு செய்துவிட்டான் ஈஷா யோகா மைய நிறுவனரான ஜக்கி வாசுதேவ்' என புகாரை கொடுத்தார். சான்றாவணங்களின் அடிப்படையில் ஜக்கி வாசுதேவ் மீது ரேப் வழக்கு (எண்: 2025-01374) பதிவுசெய்யப்பட்டது. இதுகுறித்து நக்கீரனில் நாம் விரிவாக பதிவுசெய்திருந்தோம். 'இது பொய்யான குற்றச்சாட்டு. வழக்கினை தள்ளுபடி செய்து எனக்கு அவப்பெயர் ஏற்படுத்தமுயன்ற நீதா ஜெயகாந்தனிடமிருந்து நஷ்ட ஈடு வாங்கித் தரவேண்டும்' என்று டென்னசி ஹாமில்டன் கவுண்டி மாநிலத்தின் மாவட்ட சர்க்யூட் நீதிமன் றத்தில் வழக்கினை தொடர்ந்தார் ஈஷா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ். கடந்த மூன்று மாதங் களாக நடைபெற்று வந்த வழக்கில், புகாரில் முகாந்திரம் இருக்கிறது. ஆகையால் உங்களது வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன் என ஜக்கி வாசுதேவின் வழக்கினை தள்ளுபடிசெய்துள்ளது நீதிமன் றம். இது ஈஷா மையத்திற்கு பெருத்த பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது."** ●



# போட்டு மூக்குடைபட்ட ஈஷா!

சங்கர் லால்

www.nakkheeran.in



# காங்கிரசுக்காக காத்திருக்கும் விஜய்!

விஜய்யின் அ.தி.மு.க., பா.ஜ.க. எதிர்ப்பு பேச்சுக்கு முக்கிய காரணம் அவரது காங்கிரஸ் நண்பர்கள். குறிப்பாக பிரவீன் சக்ரவர்த்தி விஜய்க்கு ஒரு முக்கிய வாக்குறுதியை அளித்திருந்தார். காங்கிரஸ் எந்த நேரமும் தி.மு.க. கூட்டணியை விட்டு வெளியே வந்துவிடும். காங்கிரசும், த.வெ.க.வும் சம எண்ணிக்கையில் தொகுதிகளை பிரித்துக்கொண்டு 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடலாம் என்பதுதான் பிரவீன் சக்ரவர்த்தி, விஜய்க்கு கொடுத்த பார்முலா. எவ்வளவு தொகுதிகள் வேண்டுமானாலும் கேளுங்கள். தமிழகத்தில் கூட்டணி ஆட்சி, காங்கிரசுக்கு துணை முதல்வர் பதவி என நான் அறிவிக்கிறேன். கேரளா, தமிழகம், புதுவை மூன்றிலும் காங்கிரசின் ஆட்சி அமையும். அஸ்ஸாம், மேற்கு வங்கம் தவிர தேர்தல் நடைபெறும் ஐந்து மாநிலங்களில் மூன்றில் காங்கிரஸ் ஆட்சி அமைவது காங்கிரசை மறுபடியும் லைம்லைட்டுக்கு கொண்டுவரும். அதற்கான வியூகங்களை நமது வியூக அமைப்பாளர்கள் சுனிலும், ஜான் ஆரோக்கியமும் இணைந்து அமைத்துத் தருவார்கள் என சொல்லியிருக்கிறார்' என்றனர் த.வெ.க.வினர்.

'தமிழகத்தில் எம்.ஜி.ஆரை விட எனக்கு செல்வாக்கு அதிகமாக இருக்கிறது. என்னை நீங்கள் காங்கிரசுக்காக பயன்படுத்திக்கொள்ளுங்கள். பா.ஜ.க. எனக்கு பல வழிகளில் அழுத்தம் கொடுத்துவருகிறது. கரூர் வழக்கில் என்னை குற்றவாளியாக்குவோம் என மிரட்டுகிறார்கள். 'ஜனநாயகன்' படத்தை ரிலீஸ் செய்யாமல் தடை விதித்துவிட்டார்கள். 35-40 சீட்டுகள், துணை முதல்வர் பதவி என விஜயகாந்த் பார்முலாவை காண்பித்து என்னை ஏமாற்றுகிறார்கள். அவர்களது பார்முலாவுக்கு நான் ஒத்துக்கொண்டால், கரூர் வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. கொடுக்கப்போகும் ரிப்போர்ட்டில் எனது பெயர் இருக்காது.. அப்படியில்லையென்றால் கரூரில் 41 பேர் மரணத்திற்கு நான்தான் காரணம் என ரிப்போர்ட் கொடுப்பார்கள். 'ஜனநாயகன்' வழக்கில் என்ன தீர்ப்பு வந்தாலும் அதில் எனக்கு எதிராக நகர்வுகளை மேற்கொள்வார்கள். அதுதவிர எனக்கெதிராக


ராகுல்


பிரவீன் சக்கரவர்த்தி

போடப்பட்டிருக்கும் இன்கம் டாக்ஸ் வழக்கு, ஜான் ஆரோக்கியம் மற்றும் ஆதவ்அர்ஜுனா மீது என்.ஐ.ஏ. வழக்கு என மிரட்டல்கள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. தினம் ஒரு தூதுவராக எங்களிடம் வந்து பேசுகிறார்கள். எடப்பாடி பழனிச்சாமி தேர்தல் செலவுகளை பார்த்துக் கொள்வதாக கூறுகிறார். உண்மையில் தேர்தல் செலவுகளுக்கு என்னிடம் பணமில்லை. தனிப்பட்ட என்னுடைய அரசியல் செலவுகளை ஆதவ் அர்ஜுனாதான் பார்த்துக்கொள்கிறார். தேர்தலுக்கு நான் நிதி திரட்ட வேண்டும். அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணிக்குச் சென்றால் இவையெல்லாம் எனக்கு எளிதில் நடந்துவிடும். ஆனால் நான் காங்கிரசை எதிர்பார்க்கிறேன். காங்கிரஸ் கூட்டணிக்கு வந்தால் தி.மு.க. வலுவான கூட்டணி என்கிற பிம்பம் உடையும். எதிர்காலத்தில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் எல்லாம் என் பின்னே அணிவகுக்கும் என்று விஜய், பிரவீன் சக்கரவர்த்தியிடம் பேசியுள்ளார்.

வழக்கமாக யார் பேசினாலும் அதை டேப் செய்து வைத்துக்கொள்ளும் பழக்கம் கொண்ட பிரவீன், விஜய்யின் இந்த மனம் திறந்த பேச்சையும் டேப் செய்தார். அதை எடுத்துக்கொண்டு ராகுல்காந்தியை சந்தித்தார். அதைக்கேட்ட ராகுல், 'உனக்கு யார் விஜய்யுடன் கூட்டணி பற்றிப் பேச சுதந்திரம் அளித்தது? தமிழகத்தில் தி.மு.க.வுடன் கூட்டணி இருக்கிறது. அந்தக் கூட்டணி தொடருகிறது. ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு என்பதெல்லாம் தேர்தல் முடிவுகள் வந்தபிறகு பேசவேண்டிய விசயங்கள். அதையெல்லாம் இப்பொழுது, அதுவும் விஜய்யுடன் பேசுவதற்கு உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது? கேரளாவிலும் புதுச்சேரியிலும், தமிழ்நாட்டிலும் காங்கிரஸ் கட்சி விஜய்யை நம்பியா வளர்ந்தது? எனது தந்தை ராஜீவ் தன்னுடைய உயிரையே தியாகம் செய்த மண் தமிழ்நாடு. அங்கு காங்கிரசுக்கு என தனி மரியாதை இருக்கின்றது. கேரளாவில் யார் தடுத்தாலும் நாம் ஆட்சிக்கு வருவது உறுதி என உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் காட்டுகிறது.

விஜய், பா.ஜ.க. கூட்டணிக்கு தேர்தல் முடிந்தபிறகு ஆதரவு தர மாட்டார் என உன்னால் உறுதியாக கூறமுடியுமா? நீ மிகப்பெரிய காங்கிரஸ் கட்சியை விஜய்க்காக அடகு வைக்கிறாய். உன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தீர்மானம் போட்டு அனுப்பி வைத்திருக்கிறார். அந்த வேலையை செய்ய வைத்துவிடாதே' என ராகுல், பிரவீன் சக்ரவர்த்திக்கு கடுமையாக டோஸ் விட்டு எச்சரிக்கை கொடுத்து அனுப்பி வைத்துள்ளார்.

ஆனால் 'நான் ராகுலிடம் பேசிவிட்டேன்' என்று மெசேஜ் ஒன்றை விஜய்க்கு அனுப்பியுள்ளார் பிரவீன். அத்துடன் 'விசில் ஊதப்பட்டது, தேர்தல் தொடங்கி விட்டது' என சமூக வலைத்தளத்தில் பதிவு செய்தார்.

இதை பாசிட்டிவாக எடுத்துக்கொண்ட விஜய், அ.தி.மு.க.வை பா.ஜ.க. அடிமை என்றும், ஊழல் கட்சி என்றும் முதல்முறையாக மாமல்லபுரம் கூட்டத்தில் பேசினார். பிளாக்கில் டிக்கெட் விற்று ஊழல் செய்தவர் என அ.தி.மு.க.வினர் விஜய்யை விமர்சனம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஓ.பி.எஸ்., ராமதாஸ் ஆகிய இருவரும் விஜய்யிடம் பேசிவருகிறார்கள். தே.மு.தி.க. விஜய் பக்கம் அதிகம் பேசாமல், தி.மு.க. பக்கம் சாய்வதற்காக பேசிக்கொண்டிருக்கிறது.

விஜய்க்கும் பிரவீன் சக்ரவர்த்திக்குமிடையேயான தொடர்புகளை ஒரு ஜோசியர் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவரை காரில் ஏற்றிக்கொண்டுதான் விஜய் மாமல்லபுரம் வந்தார். ஒருபக்கம் விஜய், மோடி விழாவில் பங்கேற்பார் என அ.தி.மு.க.வினர் புரூடா விட்டுக் கொண்டிருந்தனர். மறுபக்கம் அவர் காங்கிரசுடன் பேசிக்கொண்டிருக்கிறார்.

'மொத்தத்தில் விஜய் மிகப்பெரிய குழப்பம் மற்றும் ஏமாற்றத்துடன் இருக்கிறார்' என்கிறார்கள் த.வெ.க.வைச் சேர்ந்தவர்கள்.

**-தாமோதரன் பிரகாஷ்**



PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88,
Date of Publication on posting : Every Tuesday & Friday




# நக்கீரன்

வாரமிருமுறை

## சந்தா சிறப்பு சலுகை!




**3 வருட சந்தா**
ரூ. ~~9,360~~
ரூ.5,610
மட்டுமே!

வாசகர்களின் இதயம் தேடி... உங்கள் இல்லத்திற்கே வருகிறோம்!

Google Pay
Scan & pay

UPI ID: 9677091356@okbizaxis

**5 வருட சந்தா**
ரூ. ~~15,600~~
ரூ.7,800
மட்டுமே!

**1 வருட சந்தா**
ரூ. ~~3,120~~
ரூ.2,180
மட்டுமே!

தொடர்புக்கு... 96770 91367 96770 91385
89398 82466 044-26881700

http://mags.nakkheeran.in



advt